# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 9,909 — 1948 ம் ஆண்டு ஐப்பசிமீ 1 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## PART IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

L.D.—B. 97/46.

1947 ம ஆண்டு செப்ரெம்பா மாதம 24 ந திகதியைககொண்ட 9,775 ம் இலகக விசேஷ "கெசெற" பத்திரிகையிற பிரசுரிக்கப்பெறற பிரகடனததால் திருததபபெறற, 1945 ம் ஆணடின 12 ம இலககக கிராமாநதரக கோட்டுச் சடடத்தின 52 ம பிரிவினபடி, தம்மீது வைக்கபபட்ட நதநதுவததின பலததைக கொணடு, நீதி மநதிரியால ஆககபபடட பிரமாணஙகள்.

வி சிவசுபபிரமணியம,
நிரந்தர காரியதரிசிககாக,
நீதி மநதிரி காரியாலயம்.

கொழுமபு, 1948 ம ஆண்டு (செபரெமபா) புரட்டாதிமீ 28 ந உ.

### கிராமாந்தரக் கோடுகளுக்கான சிவில் வழக்குப் பிரமாணங்கள்.

#### I.—வழக்குத் தொடருதல்.

1. (1) கோட்டுககுத தொடாச்சிக கடதாசி சமாபபிததல மூலம ஓா வழககுத் தொடரபபடலாம ; அல்லது வழக்காளி தனது வழககை நீதவானுக்கு வாககுமூலமாகக கூற அது அவரால எழுதபபட்டு அஙஙனம எழுததுமூலமாகப பிறககும் அறிககை அவ்வழககின தொடர்சசிக கடதாசியாகபபெறும.

(2) ஒவவொரு தொடாசசிக கடதாசியும கிடைககபபெறற முறைபபடி இலககம இடபபெறறு அவவழககு ஆரமபமாதறகும அது சமபந்தமான விசாரணை நிகழசசிப பொழிபபின அஙகமாதறகும வைததிருககபபடும்.

(3) ஒவவொரு தொடாசசிக கடதாசியும் பினவரும விபரஙகளைககொண்டதாயிருததல வேண்டும :—

(a) கோடடின பெயா,
(b) வழககுத தொடாநத திகதி,
(c) வழககாளியினதும, எதிரியினதும, பெயரும வாசஸதானமும,
(d) உரிததுககேடடலின பொழிபபும, அது எபபொழுது உணடாயிற்று எனபதும,
(e) கேடகும உரிததின எபபாகமும வழககாளியாற கைவிடபபட்டால அலலது ஒததுககழிககப்பட்டால, அவவாறு கைவிடபபட்ட அல்லது ஒததுக கழிககபபட்ட தொகை.

(4) இசசட்டத்தின 43 ம் பிரிவினபடி தேவைபபடும முததிரையை வழககாளி நீதவானுககுக கொடுககவேணடும. அபபடிக கொடுக்கபபடும முததிரை தொடாசசிக கடதாசியில ஒட்டபபட்டு நீதவானால முறையே அழிககபபடும்.

2 காணியின குறிபபிட்ட பாகம சமபநதமாக, அலலது காணியின குறிபபிட்ட பாகததில உள்ள பஙகு அலலது உரிமை சமபநதமாகச சட்டததின 9 (1) ம் பிரிவினபடி ஒரு வழககுத தொடரபபட்டால அககாணியின பாகததையும், அதன இயறகையான நானகு எலலைகளையும அளவையும இயனறவரை விபரமாகத தொடாசசிக கடதாசியில குறிபபிடவேணடும ; அலலது தொடாச்சிக கடதாசியுடன இணைததிருககும குறிபபுப்படம அலலது விளககபபடம்மூலம சுட்டிககாட்டப்படல வேணடும. தனியே வெறும பெயரை மாததிரம குறிபபிடககூடாது.

3. (1) உரிததுககேடபதில பொதுவான உரிமையுடைய சகல ஆட்களும ஒரே வழககில வழக்காளிகளாகச சோககபபட்டு இநநோககததுக்காக வழககுத தொடர்சசிக கடதாசியைத திருததி யமைககாமலே சகாயம பெறறத் தகுதியுடைய ஒரு வழககாளிககோ அலலது பல வழககாளிகளுககோ அவா அல்லது அவாகள அஙஙனம சகாயம பெறற தகுதியுடையவா எனக காணபபடின, அசசகாயததை வழஙகும தீாபபு அளிககபபடலாம

(2) ஒரே நடவடிககையின பெறுபேறுகவுள்ள அலலது ஒரே உரிதது விஷயததுடன தொடாபுள்ள சகல விஷயஙகளும ஒரே வழககிற சோககபபடலாம. ஆனால ஒரே வழககில சோககககூடிய உரிததுககேடடல தொகையினை நீதவான தமது விருபபபபடி கட்டுபபடுததலாம.

(3) தனிததேனும ஒருமிததேனும எததொகையினரிடமிருநதும சகாயமபெற உரிதது இருககிறதெனச சாடடபபடும அததொகையினா சகலரும் எதிரிகளாகச சோககபபட்டு அவரவா பாததிரராகும செலபொருளுககுத தககபடி அவாகளில ஒருவாககு அலலது பலாக்கு விரோதமாகத தீாப்பு அளிககப் படலாம

(4) ஒரே வழககில ஒனறுககு மேறபட்ட உரிததுககேட்டல சேர்ககபபடுமிடதது கோடடின நியாயாதிககமானது, அவவழககுத தொடர்ந்த திகதியனறு கோரபபட்டுள்ள உரிததின மொததப பெறுமதியைப பொறுத்திருககும.

(5) ஒரு வழககைக கொணடுவருவதில அலலது அதில எதிரியாக இருபபதில பொது உரிமையுடைய பல கட்சிகள இருககுமிடதது அததகைய கட்சிகளுள ஒருவா அலலது பலா நீதவானின அனுமதியினபேரில அஙஙனம உரிமையுடைய சகல கடசிகளினதும பேரால வழககுத தொடரலாம அலலது எதிரியாக நிறகலாம.

4. மேறசொலலியவாறு தொடாசசிக கடதாசி கொடுககப்பட்டவிடதது எதிரிவநது தெரிபடுவதறகு ஓா திகதியை நீதவான குறிபபிட்டு அதைபபறறி வழககாளிககும அறிவிதது அததிகதியை வழககுப புததகததிலும பதிநதுவைபபாா. மேலும சிததாசியிற குறிககபபட்டுள்ள திகதியில எதிரிவநது தெரிபட்டு, தொடாசசிககு மறுமொழி கொடுககவேணடும எனபதைக குறிபபிடும சிததாசி ஒனறைத தமது கையொபபததுடன அலலது தாம அதிகாரம அளித்த கோட்டு லிகிதா ஒருவரின கையொபபததுடன விடும்படி நீதவான கட்டளையிடுவார். அததகைய சிததாசி ஒவவொனறும இததுடன உள்ள அட்டவணையின 1 ம இலகக மாதிரிப பததிரத்திலிருகக வேணடும.

5. வழககாளியின அலலது எதிரியின கேள்விபபடி குறிபபிட்ட வழககுத திகதியிற சாட்சியம் கொடுககவேணும சாதனஙகள கொணடுவந்து காட்டவேணும் சமூகமளிக்கத தேவையெனக காணபபடும ஆட்களுககு இதனகததுள்ள அட்டவணையின 2 ம மாதிரிபபததிரததின பொருள அமையப்பெற்ற சிததாசிகளை நீதவான விடுககலாம.

#### II.—கோட்டுக் கட்டளை.

6. சகல சிததாசிகளும் இரட்டைப பிரதியிலிருககும. அவை சாதாரணமாகக கிராமத தலைமைககாரனிடம ஒபபுடைககபபடும. ஆனால் அத்தகைய சித்தாசிகளைப் பிசுககாலிடம அலலது அவறறிற பெயா கூறபபட்ட ஒருவரிடம ஒபபடைததலால், அவை அதிக வசதியாகவேணும விரைவாகவேணும சோபபிககபபடும என நீதவான திருபதிபபட்டால அவர் அஙஙனம செயயலாம.


157——J. N. A 82428—121 (9/48)

E 1

7. (1) சித்தாசியிற் பெயர் குறிக்கப்பட்ட ஆளிடம் அதன் பிரதியை நேர்முகமாகக் கொடுத்தல் மூலம் சித்தாசி சேர்ப்பிக்கப்படும். அங்ஙனம் சேர்ப்பிக்கப்பட்டதுபற்றிய அறிக்கை சித்தாசியிற் குறிக்கப்படுதல் வேண்டும், அல்லது அச்சித்தாசியுடன் இணைக்கப்படுதல் வேண்டும். ஆயினும் வழக்குத் தொடரப்பட்ட திகதியில் இரு கட்சியினரும் சமுகமளித்து வழக்கை நடாத்த ஆயத்தமாயிருந்து நீதவான் வழக்கின் சாரத்தை எதிரிக்கு எடுத்து விளக்கினால் எதிரிக்குச் சித்தாசி சேர்ப்பிக்கப்பட வேண்டியதில்லை. நீதவான் உடனே வழக்கை விளங்கத் தொடங்கலாம்.

(2) சித்தாசி சேர்ப்பிதற்காகக் கிராமத் தலைமைக்காரன் எவருக்கும் அல்லது பிஸ்கால் எவருக்கும் அல்லது வேறெவருக்கும் அனுப்பப்பட்டதோ அவர் நியாயமான பிரயத்தனத்தின் பின் நேர்முகமாகச் சித்தாசியைச் சேர்ப்பிக்க முடியாதிருந்தால் அங்ஙனம் சேர்ப்பிக்க முடியாததைப்பற்றி எழுத்து மூலம் அறிக்கைசெய்து சித்தாசியுடன் இணைத்து நீதவானுக்கு அறிவிக்கவேண்டும். தமக்குச் சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியத்தின்படி அத்தகைய சித்தாசியில் அல்லது வேறு கோட்டுக்கட்டளையில் பெயர் குறிப்பிடப்பட்ட ஆள் இத்தீவில் இருக்கிறானென நீதவான் திருப்திப்பட்டால் அந்த ஆளின் வீட்டில் அல்லது அந்த ஆள் வழக்கமாக வசிக்குமிடத்தில் யாவர்க்கும் நன்கு புலப்படக்கூடிய பாகத்தில் அந்தச் சித்தாசியின் பிரதியொன்றை ஒட்டிவிடும்படி கட்டளையிட அவருக்குத் தகுதியுண்டு.

(3) நீதவானின் கட்டளைப்பிரகாரம் ஒட்டப்பட்டுள்ள பிரதிச்சேர்வை, பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அந்த ஆளிடம் நேரே சேர்ப்பிக்கப்பட்டதைப் போலக் காரியப்படுவதாக இருக்கும்.

(4) நீதவான் பிரதிச் சேர்வை செய்யும்படி கட்டளையிடும்போதெல்லாம் சித்தாசியிற் பெயர் குறிப்பிடப்பட்ட ஆள் வந்து தெரிப்படுதற்குக் காலவெல்லை, காரியத்திற்கேற்ப அவரால் நிச்சயிக்கப்படும்.

### III.—வந்து தெரிப்படும்போது வழக்கு விசாரணை நிகழ்ச்சி.

8. சித்தாசியிற் குறிப்பிடப்பட்ட திகதியில் இரு கட்சியினரும் வந்து தெரிப்பட்டால் சட்டத்தின் 23 ம் பிரிவிற் காட்டியபடி அவர்கள் வழக்கை இணங்குதற்கு நீதவான் பிரயத்தனஞ் செய்வார்.

9. (1) சத்தியச் சட்டத்தில் (அத்தியாயம் 14) ஏற்பாடுசெய்தவாறு சத்தியம்செய்து அல்லது உறுதிப்படுத்தி வழக்குத் தீர்க்கப்படலாம் எனக் கட்சியினர் சம்மதித்தால் அச்சட்டப்படி நீதவான் செய்து முடிப்பார்.

(2) கட்சியினர் தங்கள் வழக்கை விசாரணையில்லாமல் தீர்த்துக்கொள்வதற்குரிய சத்தியம் செய்தலின்பேரில் அல்லது உறுதிப்படுத்தலின்பேரில் இணக்கமுறையில் தீர்த்துக்கொள்ளச் சம்மதித்தால் அத்தகைய இணக்க நிபந்தனைகளை நீதவான் வழக்கு நிகழ்ச்சிப் புத்தகத்தில் எழுதிக் கட்சியினர்க்கு விளங்கப்படுத்தி அவர்களின் கையொப்பங்களையும் பெற்றுக்கொள்வார்.

10. வழக்காளி கேட்கும் உரித்தை எதிரி ஒத்துக்கொண்டால் அங்ஙனம் ஒத்துக்கொண்டதை நீதவான் வழக்குப் புத்தகத்திற் பதிந்து அதற்கு எதிரியைக் கையொப்பமிடும்படி கேட்டு, அங்ஙனம் ஒத்துக்கொண்டதற்கேற்ப எதிரிக்கு மாறாகத் தீர்ப்பு அளிப்பார்.

11. உரித்துக்கேட்டலை எதிரி மறுத்தால் அவர் அதற்கான மறுமொழியை நீதவானுக்குக் கொடுக்கும்படி கேட்கப்படுவார். நீதவான் அதன் சாரத்தை எதிரியின் மறுமொழியாக வழக்குப் புத்தகத்தில் எழுதிக்கொள்வார்.

12. எதிரி தனது மறுமொழியில் எதிர் உரித்துக்கேட்டால், அந்த உரித்தை ஒத்துக்கொள்ளுகிறாரா அல்லது மறுக்கிறாரா என்று அவ்வழக்காளி கேட்கப்படுவர். எதிர் உரித்துக் கேட்டலை அவர் ஒத்துக்கொண்டால் அங்ஙனம் ஒத்துக்கொண்டதை நீதவான் வழக்குப் புத்தகத்திற் பதிந்து அதற்கு வழக்காளியைக் கையொப்பமிடும்படி கேட்பார். எதிர் உரித்துக் கேட்டலை வழக்காளி மறுத்தால் அதற்கான மறுமொழி கொடுக்குமாறு அவர் உடனே கேட்கப்படுவார்.

13. எதிரியின் மறுமொழியைப் பதிவுசெய்துகொண்டவுடன் அல்லது அத்தகைய உரித்துக்கேட்டலுக்கு மறுமொழி கொடுத்து எதிர் உரித்துக் கேட்டவுடன் அவ்வழக்கை விளங்குதற்கு ஒரு திகதியைக் குறிப்பிட்டு அதனை வழக்குப் புத்தகத்திற் பதிவுசெய்துகொள்ளுதல் வேண்டும்.

14. இரு கட்சியினருள் ஒரு கட்சியின் விண்ணப்பத்தின் பேரில், வழக்கை விளங்கத் தொடங்க முன் அல்லது தொடங்கும்பொழுது வழக்காளியாகவேனும் எதிரியாகவேனும் முறையற்ற விதத்திற் சேர்க்கப்பட்ட எந்தக் கட்சியின் பெயரையும் நீக்கி விடும்படி நீதவான் கட்டளையிடலாம். அவ்வழக்குச் சம்பந்தப்பட்ட சகல விஷயங்களையும் கோட்டார் சித்திகரமாகவும் பூரணமாகவும் நியாயவிசாரணை செய்து தீர்ப்பதற்கு ஒருவர் வந்து தெரிப்படல் தேவையெனக் காணப்பட்டால் நீதவான் அவ்வழக்கில் அவரை எதிரியாகவேனும் வழக்காளியாகவேனும் சேர்த்து இதனகத்து முன்னர் ஏற்படுத்தியவாறு அவர் விஷயத்திலும் வழக்கு விசாரணை நிகழ்ச்சி முறை கையாளப்படலாம்.

### IV.—வந்து தெரிப்படத் தவறியவிடத்தில் விசாரணை நிகழ்ச்சி.

15. (1) சித்தாசியிற் குறிப்பிடப்பட்ட திகதியிலன்று, அல்லது வழக்கு விளங்குவதற்குக் குறிப்பிட்ட திகதியிலன்று வழக்காளி வந்து தெரிப்படாதிருந்தால், அல்லது வராமைக்குப் போதிய நியாயம் காட்டாமல் இருந்தால் வழக்காளியின் தொடர்ச்சி தள்ளப்படும். ஆயினும் 10 ம் பிரமாணத்தின்படி எதிரி கூப்பிடப்பட்டபோது வழக்காளி கேட்கும் உரித்தை எதிரி ஒத்துக்கொண்டால் வழக்காளியின் சார்பாக நீதவான் தீர்ப்பெழுதி அதற்கு எதிரியைக் கையொப்பமிடும்படி கேட்பார்.

(2) சித்தாசியிற் குறிப்பிடப்பட்ட திகதியிலன்று அல்லது வழக்கு விளங்குவதற்குக் குறிக்கப்பட்ட திகதியிலன்று எதிரி வந்து தெரிப்படாதிருந்தால் அல்லது வராமைக்குப் போதிய நியாயம் காட்டாதிருந்தால், எதிரி வந்து தெரிப்படுதற்குச் சித்தாசி சேர்ப்பிக்கப்பட்டதென்பது ருசுப்படுத்தப்பட்டதும் அவர் வந்து தெரிப்படத்தவறியமை காரணமாக அவருக்கு மாறாக நீதவான் தீர்ப்பெழுதலாம்.

ஆயினும் ஒரு காணியின் ஆட்சி உரித்து நயம் அல்லது சொந்தத்தை சம்பந்தமாகப் பிணக்குள்ள சகல வழக்குகளிலும் அல்லது வழக்காளி கேட்கும் உரித்துக்கு ஆதாரமாகவுள்ள சாட்சியம் கேட்டல் தேவையென அல்லது உசிதமென நீதவான் கருதும் வேறெந்த வழக்கிலும் நீதவான் அத்தகைய சாட்சியத்தைக் கேட்பர். அங்ஙனம் சாட்சியம் கேட்டு அச்சாட்சியங்களின் தாரதம்மியங்களைச் சீர்தூக்கியபின்னர், வந்து தெரிப்படத்தவறிய குற்றத்தைப் பொருட்படுத்தாமல் நீதியெனக் காணும் முறையில் நீதவான் தீர்ப்பு அளிப்பார்.

(3) சித்தாசியிற் குறிப்பிடப்பட்ட திகதியிலாவது வழக்கு விளங்குவதற்குக் குறிக்கப்பட்ட எந்தத் திகதியிலாவது வழக்குக் கூப்பிடப்படும்போது இரு கட்சியினரும் வந்து தெரிப்படாதிருந்தால், கோட்டில் விளங்கப்பட வேண்டிய வழக்குக் கோவையிலிருந்து குறித்த வழக்கு அகற்றப்படும்.

(4) வந்து தெரிப்படத்தவறியதன் பேரில் கட்டளையிடப்பட்ட கட்சி, அக்கட்டளையின் பின்னர் நியாயமான கால எல்லையுள் வந்து தெரிப்பட்டு எதிர்பாராத விபத்து, சுகவீனம், துர் அதிர்ஷ்டம் அல்லது தடுக்கமுடியாத வேறு காரணம்பற்றி குறிக்கப்பட்ட திகதியன்று வந்து தெரிப்படாமற் றடுக்கப்பட்டார் எனவும், அவருக்கு நல்ல பலமான வழக்கு இருக்கின்றதென்னவும் நீதவான் திருப்திப்பட்டால், விதித்தற்கு நீதியானதும் தகுந்ததும் என நீதவான் கருதும் விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய அவர் முன்னரிட்ட கட்டளையை நீக்கி, வந்து தெரிப்படத்தவறியதன் பேரில் கட்டளை இட்டபொழுது அந்த வழக்கு எந்த நிலைமையில் இருந்ததோ அந்த நிலைமையிலிருந்து வழக்கைத் தொடர்ந்து நடத்தும்படி, மற்றக் கட்சிக்கு அறிவித்தல் கொடுத்தபின், கட்டளையிடுவார்.

அத்தகைய விண்ணப்பத்துக்கு அநுமதி கொடுத்தல்—அல்லது மறுத்தல் பற்றிய கட்டளையுடன் அது அளிக்கப்பட்டதற்குரிய நியாயங்களைக் காட்டும் தீர்ப்பும் சேர்ந்திருத்தல் வேண்டும். இக்கட்டளைக்கெதிராக அப்பீல் முறையீடு செய்யலாம்.

### V.—விளக்கம்.

16. (1) நீதவான் வழக்கு விசாரணை நிகழ்ச்சி யாவற்றையும் எழுதிவைத்தல் வேண்டும். மேலும் சத்தியம் செய்து அல்லது உறுதிப்படுத்திக் கட்சியினரும் சாட்சிகளும் கொடுக்கும் சாட்சியத்தையும் எழுதிவைத்தல் வேண்டும்.

(2) சமுகம் அளித்த கட்சியினரின் பெயர்கள், ஒவ்வொரு நாளும் வழக்கு விசாரணை நிகழ்ச்சி ஆரம்பிக்கும்பொழுது முதலில் குறித்துக்கொள்ளுதல் வேண்டும்.

17. (1) கட்சியினர் ஒற்றுமையாக இணங்கிக்கொள்ள விரும்பாதிருந்தால், நீதவான் சாட்சியம் கேட்டு வழக்கிற்குத் தீர்ப்பளிப்பர். வழக்கிற் சரியான முறையிற் தீர்ப்பளிப்பதற்கு கட்சியினர்க்கிடையில் உள்ள எந்த முக்கியமான பிணக்கு விஷயங்களைப் பற்றித் தீர்மானிப்பது அவசியம் என அவர் கருதுகிறாரோ அத்தகைய முக்கியமான பிணக்கு விஷயங்களையிட்டு அவர் கேள்விகள் மூலமாகக் கேட்டு அவற்றைக் குறிப்பிட்டுக்கொள்ளுவார். இதன்பொருட்டு நீதவான் வழக்காளியின் வாக்குமூலத்தையும் எதிரியின் மறுமொழியையும் பரிசீலனை செய்வது மட்டுமன்றி கட்சியினர்க்கிடையே காணப்படும் பிணக்கு விஷயங்களின் உண்மை இயல்பை அறிந்துகொள்ளும் பொருட்டு அவர்களிடமேனும் அவர்களில் ஒருவரிடமேனும் தேவையெனக் காணப்படும் இன்னும் வேறு கேள்விகளையும் கேட்கலாம். அதன்பின் கிரியாமுறை வருமாறு :—

(a) வழக்காளி சத்தியம் செய்து அல்லது உறுதிப்படுத்திக்கொடுக்கும் சாட்சியம்.

(b) சத்தியம் செய்து அல்லது உறுதிப்படுத்தி வழக்காளியின் சாட்சிகள் கொடுக்கும் சாட்சியம்.

(வழக்காளி கட்சி விசாரணை முடிவு.)

(c) சத்தியம் செய்து அல்லது உறுதிப்படுத்தி எதிரி கொடுக்கும் சாட்சியம்.

(d) சத்தியம் செய்து அல்லது உறுதிப்படுத்தி எதிரியின் சாட்சிகள் கொடுக்கும் சாட்சியம்.

(எதிரி கட்சி விசாரணை முடிவு.)

(e) தீர்ப்பு.

(2) ஒவ்வொரு கட்சியும் தனது எதிர்க்கட்சியையும் சாட்சிகளையும் குறுக்கு விசாரணை செய்யலாம். மேலும், தனது சொந்தச் சாட்சிகளையும் விசாரணை செய்வதோடு மீளவும் விசாரணை செய்யலாம்.

(3) எதிரிகள் ஒருவருக்கு மேற்பட்டிருப்பின், ஒவ்வொரு எதிரியும் சாட்சியம் கொடுத்துத் தன் சாட்சிகளைக் கூப்பிட்டுத் தனித்தனியாகத் தன் பக்கத்து வழக்கை முடிவு பெறச் செய்யலாம்.

(4) நீதவான் தேவை எனக் கருதின் வழக்காளியை, எதிரியை அல்லது சாட்சியை மேலும் விசாரணை செய்வதற்காக அல்லது குறுக்கு விசாரணை செய்வதற்காக மறுபடி கூப்பிடலாம் அல்லது கட்சியினர் குறிப்பிடாத ஒருவரைச் சாட்சியாகக் கூப்பிடலாம்.

(5) இரு கட்சியினருள் ஒரு கட்சியினர் சாட்சியம் கொடுக்கவேனும் சாட்சிகளைக் கூப்பிடவேனும் விரும்பாதிருந்தால் அங்ஙனம் செய்வதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டும் ஏற்றுக்கொள்ளவில்லையென வழக்குப் புத்தகத்திற் குறிப்பெழுதல் வேண்டும்

(6) நீதவான் தகுதியெனக் காணும் கேள்விகளை எல்லாச் சமயத்திலும் கட்சியினரிடமாவது சாட்சிகளிடமாவது கேட்கலாம் மேலும், கோட்டில் சமுகமளித்துள்ள எவரையும் சாட்சியம் கொடுக்கும்படி அல்லது அவரிடம் உள்ள சாதனத்தைக் கொண்டு வந்து காட்டும்படி நீதவான் கட்டளையிடலாம்

(7) தொடர்ச்சியில் சம்பந்தப்பட்ட கட்சியினர் அல்லாதவரும், அத்தொடர்ச்சியில் இரு கட்சியினருள் ஒரு கட்சியினராலாவது சாட்சியாகப் பெயர் கூறப்படாதவருமாய எவரையும் சாட்சியம் கேட்க வேண்டுமென நீதவான் எப்பொழுதாவது கருதினால், நீதவான் தாமாகவே சீத்தாசியில் குறிப்பிட்ட ஒரு திகதியில் அந்த ஆளைக் கூப்பிடுவித்து அத்திகதியில் அவரை ஓர் சாட்சியாக விசாரணை செய்யலாம் வழக்கைத் தீர்ப்பதற்குத் தேவையானதென நீதவான் கருதும் யாதேனும் சாதனத்தை இருகட்சியினரும் கொண்டுவந்து காட்டாதிருந்தால் அந்தச் சாதனம் எவர் பொறுப்பில் இருக்கிறதோ அவருக்குச் சீத்தாசி விடுத்து அதனைக் கொண்டுவந்து காட்டும்படி செய்வர்.

## VI.—தீர்ப்பும் தீர்வையும்.

18. விசாரணை முடிந்த உடனேயே நீதவான் கோட்டில் பகிரங்கமாகத் தீர்ப்பளிப்பர். அல்லது விசாரணை முடிவில் கட்சியினருக்கு அறிவித்தல் கொடுத்து வேறொரு திகதியில் தீர்ப்புக் கூறுவர்.

19. தீர்ப்பு ஆங்கிலத்தில் எழுதப்பட்டுக் கோட்டில் பகிரங்கமாகத் தீர்ப்பளிக்கும் சமயத்தில் அதற்கு நீதவான் கையொப்பமும் திகதியுமிடுவர். வழக்கின் வரலாற்றுப் பொழிப்பும் அதனை நிர்ணயிப்பதற்குரிய அம்சங்களும் அவற்றைப்பற்றிய தீர்மானங்களும் அத்தகைய தீர்மானங்களுக்குரிய நியாயங்களும் தீர்ப்பில் அடங்கியிருத்தல் வேண்டும். தீர்ப்பின் இறுதியில் கேட்கப்படும் சகாயம் பற்றியும் பணச்செலவு யாதேனுமிருப்பின் அத்தொகை பற்றியும் நீதவான் தெளிவாகக் கூறும் அறிக்கை (இதனகத்துப் பின்னர் " தீர்வை " எனப்படும்) தீர்ப்பின் இறுதியிற் சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும்.

20. தீர்வை அசைவற்ற ஆதனத்தைப்பற்றியதெனின் அதனாற் பாதிக்கப்படும் ஆதனத்தை இயன்றவரை சரியாகக் கண்டுபிடிக்கும்பொருட்டு அத்தீர்வையில் அதன் எல்லைகள் திட்டமாக வரையறுக்கப்படவேண்டும். அல்லது சரியான பகுதியைக் காட்டக்கூடியதாக நில அளவைப்படக் குறிப்பினால் அல்லது வேறுவகையாக விபரிக்கப்படவேண்டும்

21. பணம் கட்டவேண்டுமென்ற சகல தீர்வைகள் விஷயத்திலும் கட்டவேண்டுமெனத் தீர்வையிற் குறிக்கப்பட்ட தொகையினைத் தவணைப் பணங்களாகக் கட்டலாம் என்று நீதவான் கட்டளை செய்யலாம் ஆனால் முதல் தவணைப் பணத்தையேனும் அதற்குப் பிந்திய எத்தவணைப் பணத்தையேனும் கட்டத்தவறினால் முழுப் பணத்தொகையும் அல்லது கட்டவேண்டிய எஞ்சிய பணத்தொகை முழுவதும் உடனே அறவிடப்படவேண்டியதாகும்.

22. வழக்காளி கேட்ட உரித்துப்பணத்தை ஒத்துக்கழித்துவிட எதிரி அனுமதிக்கப்பட்டால் எந்தக் கட்சியினருக்குப் பணம் எஞ்சியிருந்து செல மதியாகத் தோற்றுகின்றதோ அத்தொகையை அறவிடுதற்கே தீர்வை இடப்படும் ஒத்துக்கழிப்பதால் அல்லது எதிர் உரித்தினால் எதிரிக்கு அளிக்கப்படும் ஒரு தீர்வை அவ்வெதிரி வேறொரு தொடர்ச்சி மூலம் வழக்காளிக்கெதிராக வைத்த வழக்கிற் கிடைத்த தீர்வைபோல் அதே பிரமாணங்களுக்கமைவாகப் பலமுடையதாகும்.

## VII.—தவணை இடுதல்.

23. பிணக்கிற்குக் காரணமாகவுள்ள நிலத்தை அல்லது பொருளை நீதவான் பார்வையிடுவது உசிதம் அல்லது தேவையெனக்கருதின் அங்ஙனம் பார்வையிடும்வரை நீதவான் விளக்கத்தை அல்லது முடிவான தீர்ப்பைப் பின்போடலாம். அங்ஙனம் பார்வையிடும் நேரத்தையும் இடத்தையும் பற்றிய அறிவித்தல் கட்சியினருக்கு வாய்மொழிமூலம் அல்லது எழுத்துமூலம் நீதவானால் முறைப்படி கொடுக்கப்படும் அங்ஙனம் பார்வையிடும்போது கட்சியினர் சமுகமளிக்க உரித்துடையர் என்பது அவ்வறிவித்தலிற் குறிக்கப்படும்.

24. முக்கியமான ஒரு சாட்சி (அந்தச் சாட்சி கூட்டுக் கள்ள யோசனையால் வராதிருந்தாலொழிய) வராமை காரணமாக அல்லது வேறு போதிய நியாயம் காரணமாக ஒரு கட்சியினர் விளக்கத்தைக் கொண்டுநடத்த முடியாதென நீதவான் திருப்திப்பட்டால் அவ்வழக்கு விசாரணையை ஒரு முறை அல்லது அடிக்கடி நிறுத்தி வைத்தற்கு நீதவானுக்குச் சட்டபூர்வமான உரித்துண்டு ஆயினும் தமக்குத் தகுதியெனக்காணின் சமுகமளித்த எந்தச் சாட்சிகளையாவது விளங்கி முக்கியமான சாட்சி வந்து தெரிபடும்வரை வழக்கு விசாரணையை நீதவான் பின்போடலாம்

25. எந்தக் கோட்டு நீதவானாவது சுகவீனம் அல்லது எதிர்பாராத வேறு நியாயம் காரணமாகக் கோட்டுக்கு வராதிருந்தால் அக்கோட்டின் மீது அப்பீல் நியாயாதிக்க அதிகாரமுள்ள டிஸ்திரிக் நீதவானால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அக்கோட்டின் லிகிதர் நீதவான் வராத காலத்தில் விளக்கத்திற்கு நியமிக்கப்பட்ட சகல வழக்கு விசாரணைகளையும் கூப்பிட்டு அவற்றின் விசாரணையைப் பின்போடுதல் தகுதியானதாகும்.

## VIII.—ஒற்றுமையான இணக்கம்.

26 நீதவான் முன்னிலையில் ஓர் ஒற்றுமையான இணக்கம் கட்சியினர்க்கிடையே ஏற்படும்பொழுது, அத்தகைய இணக்க முறை நிபந்தனைகளை நீதவான் வழக்குப் புத்தகத்தில் பதிவு செய்தல் அவருடைய கடமையாகும். அப்படி எழுதப்பட்ட நிபந்தனைகள் கட்சியினருக்கு விளங்கப்படுத்தப்பட்டு அவர்களால் கையொப்பம் இடப்படவேண்டும் அத்தகைய இணக்க ஒழுங்கு ஓர் தீர்ப்புப்போல் பலமுடையதாகும்

## IX.—அப்பீல்.

27. (1) ஓர் கோட்டின் தீர்ப்புக்கு அல்லது முடிவான கட்டளைக்கு எதிராகச் செய்யப்படும் ஒவ்வொரு அப்பீலும் எழுத்துமூலமான பெட்டிசமாகச் சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி அப்பீல் முறையீடு செய்பவரால் அல்லது முறையீடு செய்பவர்களால் கையொப்பமிடப்பட்டு, சட்டத்தின் 41 ம் பிரிவிற் குறிப்பிட்ட காலவெல்லையுள் நீதவானிடம் சமர்ப்பிக்கப்படவேண்டும். அத்தகைய பெட்டிசம் தெளிவாக எழுதப்பட்டு பின்வரும் விபரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்

(i ) வழக்கு நடந்துகொண்டிருக்கிற கோட்டின் பெயர்.
(ii ) வழக்கின் இலக்கம்.
(iii ) வழக்கில் சம்பந்தப்பட்ட கட்சியினரின் பெயர்களும் அப்பீல் செய்யும் கட்சியின் பெயரும்.
(iv.) வழக்கு வரலாற்றுப் பொழிப்பும் அப்பீல் செய்தற்குறிய நியாயங்களும்.
(v.) கேட்கும் சகாயத்தின் தன்மை.

(2) சட்டத்தின் 47 ம் பிரிவின்படி முறையாக முத்திரை யொட்டப்படாத பெட்டிசம் பெட்டிசக்காரனுக்குத் திருப்பியனுப்பப்படும்.

(3) அப்பீல் பெட்டிசம் நீதவானுக்குச் சமர்ப்பிக்கப்பட்டதும் அவர் அதில் உள்ள முத்திரைகளை அழித்து, அதனை வழக்குப் புத்தகத்துடன் டிஸ்திரிக் நீதவானுக்கு அனுப்புவார்.

(4) அப்பீல் பெட்டிசத்தை நீதவான் அனுப்பும்போது அது கிடைக்கப்பெற்ற திகதியை அதிற் குறிப்பிட்டு அத்தாட்சி செய்வர்.

## X.—வழக்குப் புத்தகம்.

28. இத்துடன் உள்ள அட்டவணையின் 3 ம் இலக்க மாதிரிப் பத்திரத்தில் நீதவான் வழக்குகளின் இடாப்பை வைத்திருந்து அக்கோட்டின்மீது நியாயாதிக்க அதிகாரமுள்ள டிஸ்திரிக் கோட்டு நீதவானுக்குக் குறித்த அட்டவணையின் 4 ம் இலக்க மாதிரிப்பத்திரத்தில் ஒவ்வொரு மாத முடிவிலும், அம்மாதத்தில் செய்த வேலை விபரத்திரட்டை அனுப்புதல் வேண்டும்.

29. ஒரு கோட்டில் தொடரப்பட்ட சிவில் வழக்குச் சம்பந்தமான வழககுப புததகததை அலலது வழககு விசாரணைப் பொழிபபை தமது பாது காப்பில அச்சமயம வைததிருககும ஓர் கோடடு நீதவான் அல்லது டிஸ்திறிக் கோட்டு நீதவான எவராவது விண்ணபபம செயதவிடதது 120 சொறகளைக் கொணட ஒவவொரு பககததுக்கும் 12 சத வீதம பணம் கடடியதும அததகைய வழக்குப் புததகததின அலலது வழககு விசாரணைப பொழிபபின பிரதியை அல்லது அதன எபபகுதியின பிரதியையும் அவருக்குக்கொடுப்பர். ஆயினும நீதவான அலலது டிஸதிறிக கோடடு நீதவான அததகைய பிரதிவேண்டும என்று விண்ணபபம செயதவருக்குப் பணமினறிக கொடுக்க வேண்டுமென யாதேனும காரணம பறறிக கருதினுல, தமது விருபபபபடி பணம கடடுவதை நீககிவிடலாம.

### XI.—கட்டளைப் பத்திரத்திலும், வழக்கு விசாரணைப் பொழிப்பிலும் வழக்குப் புத்தகத்திலும் உபயோகிக்கும் பாஷை.

30. ஒரு கோடடினுல் விடப்படும சகல கட்டளைப பத்திரங்களும அக்கோடடில் வழககு விசாரணை நிகழசசி நடததப்படும பாஷையிலேயே இருககும.

31. ஒரு கோட்டிலுளள வழககுகளின இடாபபும் ஒவ்வொரு வழககின வழககுப புத்தகமும ஆஙகிலததிலே எழுதி வைககபபடும.

### XII.—மைனர்களால் அல்லது அவர்களுக்கு எதிராகவுள்ள தொடர்ச்சி அல்லது வேறு விசாரணை நிகழ்ச்சி.

32. ஒரு மைனரால் அலலது அவருககெதிராக தொடரப்படும் தொடர்சசி அலலது வேறு விசாரணை நிகழசசியில சிவில வழககுச சடடத்தின 582 ம பிரிவினபடி அந்த மைனரின் ஆதனம சம்பநதமாகத தத்துவ அதிகாரப பததிரம பெறறவா அநத மைனா சாாபாக வழககுத தொடருவார் அலலது எதிரியாககபபடுவார் ஒரு மைனரின ஆதனம சமபநதமாக எவராவது தததுவ அதிகாரப பததிரம பெறுதிருநதால அநத மைனரால அலலது அவருககெதிராகத தொடரப்படும தொடர்சசி அல்லது வேறு விசாரணை நிகழசசியில, அநநோககததுககாக நீதவான அதிகாரமளிககும வயது வநதவா ஒருவர் அநத மைனா பேரால வழககுத் தொடருவாா அலலது எதிரியாககபபடுவாா.

ஆயினும ஓா மைனா தனககுச சமபளமாக, அல்லது துண்டு வேலைககாக அலலது தான வேலையாளாக, தொழிலாளியாக, கைதோநத வேலை யாளாகச் செய்த வேலையின பொருடடுப பெறவேண்டிய பணத்திறகாக அவா வயது வநதவாபோல வழககுத தொடரலாம்.

### XIII.—தொடர்ச்சியிற் சம்பந்தப்பட்ட எக்கட்சியினராவது இறந்தபின் தொடர்ச்சியைத் தொடர்ந்து நடாத்தல்.

33. வழககைத தொடாநது நடாததும உரிதது அழியாது இருபபின வழககாளி அலலத் எதிரி இறநததினுல அவவழககு நிறுததபபடமாடடாது.

34. ஒருவருககு மேற்படட தொகையினா வழககாளிகளாக அலலது எதிரிகளாக இருநது அவாகளில எவராவது இறநதால வழக்கைத தொடாநது நடாத்தும உரிதது அழியாது, உயிரோடிருககும வழககாளி அலலது வழககாளிகளுககு மடடும இருநதால, அலலது உயிரோடிருககும எதிரி அலலது எதிரிகளுககு மாருக மடடும இருநதால அபபடி உயிரோடிருககும அநத வழககாளி அலலது வழககாளிகளின வேணடுகோளினபடி அலலது அபபடி உயிரோடிருககும அநத எதிரி அலலது எதிரிகளுககு எதிராக நீதவான வழககு விசாரணையை நிகழததுவாா.

35. ஒருவருககு மேறபடடவர்கள வழககாளிகளாகவிருநது அவாகளில எவராவது இறநதபினனா வழககினைத தொடாநது நடாத்தும உரிதது உயிரோடிருககும வழககாளி அலலது வழககாளிகளுககு மடடும இல்லாமல், அவருககும அலலது அவாகளுககும, காலஞ்சென்ற வழககாளியின சடட பூர்வமான பிரதிநிதிககும சோநது இருக்குமாஞல, காலஞ்சென்றவரின சடடபூாவமான பிரிதிநிதி யாரேனுமிருபபின அநதச சடடபூாவமான பிரதிநிதி யையும நீதவான கடசியினருள ஒருவராககி, வழக்குப புத்தகததில் அதனைபபறறிக குறிபபெழுதுவிதது வழககு விசாரணையைத தொடாநது நடாததுவாா

36. ஒரு தனி வழககாளி, அலலது வழககாளிகள இறந்தபின உயிரோடிருநத எஞ்சிய ஓா தனி வழககாளி, இறநதவிடதது (வழககைத தொடாநது நடததும உரிமை அழியாதிருபபின) அபபடிக காலஞ்சென்றவரின சடடபூர்வமான பிரதிநிதி காலமசென்ற வழககாளிககுப பதிலாகத தமது பெயரை வழக்குப புததகததிற பதிந்துகொள்ளுமபடி நீதவானுக்கு விணணபபம செயயலாம். நீதவான அவருடைய பெயரை அதிற பதிநதுகொணடு வழககு விசாரணையைத் தொடாநது நடாததுவா.

37. காலஞ்சென்ற வழக்காளியின சடடபூாவமான பிரதிநிதியாதறகு எவராவது 36 ம பிரமானததினபடி நீதவானுககு விண்ணபபம செய யாதிருநதால நீதவான் வழக்கைத தளளிவிடலாம அல்லது எதிரி விண்ணபபம் செயததனபேரில தாம சரியெனககண்டால, காலஞ்சென்ற வழக காளியின சடடபூாவமான பிரதிநிதியை வழககிற சமபநதபபடுதறகு, அலலது பிணககுககேதுவாயுள்ள விஷயததில ஓா முடிவான தீாபபளிததறகு அலலது இநத இரணடு நோககஙகளுககாகவும் தாம தகுதியெனககாணும கடடளையை நீதவான இடலாம.

38. (1) ஒருவருககு மேறபடட தொகையினர் எதிரிகளாக இருநது அவாகளில எவராவது தீாவை பிறபபிபபதறகுமுன இறகக, உயிரோடிருககும எதிரி அலலது எதிரிகளுககு மடடும எதிராக வழககைததொடர்நது நடாததும உரிமை இலலாதிருககுமிடததும, ஓா தனிபபடட எதிரி அலலது எதிரிகள இறநதபின உயிரோடிருககும எஞ்சிய தனிபபடட எதிரி காலஞ்சென்றவிடதது, வழககைத தொடாநது நடாததும உரிதது அழியாது இருககுமிடததும, காலம்சென்ற எதிரியின சடடபூாவமான பிரதிநிதியெனககாணும எவரினது பெயரையும ; விபரததையும, வாசம செயயுமிடததையும வழககாழி குறிப் பிட்டுககாட்டி., காலஞ்சென்ற எதிரிககுப பதிலாக அவரை எதிரியாக்க விருமபுவதையும காட்டி நீதவானுககு விணணபபம செயயலாம, நீதவான அஙஙனம செயவதறகு நியாயமிருககிறது எனத திருப்திபபடடதும், காலஞ்சென்ற எதிரிககுப பதிலாக அநதப பிரதிநிதியின பெயரைப் பதிவு செய்து, சிததாசியிற குறிபபிடும திகதியில வழக்கிறகு மறுமொழி கொடுககக கோடடில வநது தெரிபடுமபடி அபபிரதிநிதிககுச சிததாசி விடுபபாா, அதன பினனா அததகைய பிரதிநிதி, ஆரமபததிலிருநதே எதிரியாக வைககபபடடு அததொடாசசியில முனனா நடைபெறற விசாரணை நிகழசசிகளில பஙகுபற்றிய கடசியினாபோலக கருதபபடடு வழககுத தொடாநது நடாததபபடும. அஙஙனம சோககபபடட ஒருவா அவ்வழக்கில தாம எதிரியாக்கப் படுதறகுப பாததிரவாளியலலா என வாதிககலாம அலலது வழககின தராதரததை ஆடசேபிதது வாதிககலாம.

(2) காலஞ்சென்ற ஓா எதிரியின சடடபூாவமான பிரதிநிதி, காலஞ்சென்ற எதிரிககுப பதிலாகத தமமை எதிரியாககுமபடி விணணப்பம செய்யலாம. அவவழககில எதிரியாககச சோககபபடுதறகு உரிததுடையவராயின நீதவான அவரை எதிரியாககச சேர்ததுககொளவா.

### XIV.—நிறைவேற்றுதல்.

#### (a)—நடுக்கட்டல் அதிகாரப்பத்திர விண்ணப்பம்.

39. (1) தீாவையை நிறைவேறறற்கான நடுககடடல அதிகாரபபததிரம பெறறுககொளவதறகுரிய விணணபபம ஒவவொனறும எழுததுமூலம் செயயப்படடு விணணபபக்காரனின கையொபபததை உடையதாயப பினவரும விபரங்களைககொண்டிருககும:—

(a) தொடாசசி இலககம

(b) கடசியினரின் பெயாகள.

(c) தீர்வைத திகதி.

(d) தீர்வைககெதிராக அபபீல செய்யபபடடிருககிறதோ எனபது.

(e) தீர்வைபபடி உரிய கடன தொகை அல்லது நட்ட ஈடு அலலது அதனபடி கொடுககபபடும் சகாயம.

(f) செலவு ஏதும கொடுககத் தீாபபளிககபபடடதெனின அசசெலவின தொகை.

(g) தீாவை எவருககு எதிரா நிறைவேறறபபட வேணடுமோ அவரின பெயா.

(2) (1) ம பந்தியினபடி உளள விணணபபம, அபபீல செயயும காலம முடிநதபின, அலலது அபபீல கேடடிருநதால அவவபபீல தீாககபபட்டபின அனறி ஏறறுககொளளப்பட மாட்டாது.

40. (1) கோடடின முடிவான தீாபபு அலலது கட்டளையளிககபபடட திகதியிலிருநது ஒரு வருடமும ஒரு நாளுமாகிய காலவெல்லையுள, அல்லது அப்பீல் கேட்டவிடதது அபபீலில கொடுககபபட்டுளள கடடளை அலலது தீாபபு விணணபபககாரனுககு அறிவிககபபடட திகதியிலிருநது ஒரு வருடமும ஒரு நாளுமாய காலவெலலையுள 39 ம பிரமாணபபடி ஓா விணணபபப்பத்திரம கொடுககபபடடால நீதவான விணணபபப்பததிரம் சரியான முறையில அமைந திருககிறதெனவும, விண்ணபபம செயதவா தீாவையை அலலது கடடளையை நிறைவேறறுவிபபதறகு உரித்துடையவா எனவும நீதவான, தேவையெனக் காணின வழககுப புததகததைப பாாவையிடடுத திருபதிபபடட பினனா, இததுடன உளள அடடவணையின 5 ம இலக்க மாதிரிப பததிரததில நடுககடடலை நிறைவேற்றும் அதிகாரபபததிரததை பிஸகாலுககுக கொடுபபிபபார்.

(2) 39 ம பிரமாணததினபடி ஓா விணணபபபபததிரம ஓா வருடமும ஓர் நாளும் கழிநதபினனா, ஆனுல மேறசொலலிய திகதியிலிருநது 10 வருடங்களுக்குட கொடுககபபடடால, கடன இறுககத்தீாககபபடடவாககு எதிராக நடுககடடலை நிறைவேறறும அதிகாரபபததிரததை ஏன விடுககககூடாது என்று குறிததததொரு திகதிககுள நியாயம காடடுமபடி, நீதவான் அவ்விணணபபம சாாபாய அறிவிததலில அத்திகதியைக குறிப்பிட்டு அதனைக கடன இறுக்கத் தீர்க்கப்படடவரிடம சோபபிப்பா. கடன இறுககததீாககபபட்டவா போதிய நியாயம காடடத தவறினுல நீதவான மேறசொலலியவாறு நடுககடடலை நிறைவேற்றும அதிகார பததிரத்தைப பிறபபிபபாா.

41. ஒருவருக்கு மேற்பட்ட தொகையினர் சார்பாக ஒருமித்துத் தீர்வை எழுதப்பட்டால், அத்தகைய ஆட்களில் ஒருவர் அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினர் அல்லது அவருடைய அல்லது அவர்களுடைய சட்டபூர்வமான பிரதிநிதிகள் அவர்கள் எல்லாருடைய நன்மைக்காகவும் அல்லது அவர்களில் எவராவது இறந்துவிட்டால் உயிரோடிருப்பவர்களினதும் இறந்தவர்களின் பேரால் உரித்துக் கேட்பவர்களினதும் நன்மைக்காகவும் முழுத் தீர்வையையும் நிறைவேற்றுதற்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

அத்தகைய ஓர் விண்ணப்பம் செய்யப்பட்டவிடத்து நீதவான் அவ்விண்ணப்பத்தை ஏன் அனுமதிக்கக் கூடாதென்பதற்குக் குறிக்கப்படும் ஒரு திகதியி லன்று நியாயம் காட்டும்படி அத்தீர்வைபெற்ற மற்றவர்களுக்கு அல்லது அவர்களின் பிரதிநிதிகளுக்கு அவ்விண்ணப்பம் சார்பாய் அறிவித்தலை அவர்களிடம் சேர்ப்பிப்பர்.

42. தமக்குச் சாதமாகத் தீர்வைபெற்றவர் அத்தீர்வையை வேறெவருக்காவது கையளித்தால் அங்ஙனம் கையளிக்கப்பெற்றவர் அதனை நிறை வேற்றுதற்கு விண்ணப்பஞ்செய்யலாம். தீர்வைப் புத்தகத்தில் அங்ஙனம் கையளிக்கப்பெற்றவர் அதனை நிறைவேற்றுதற்கு விண்ணப்பஞ்செய்யலாம். தீர்வைப் புத்தகத்தில் அங்ஙனம் கையளித்தவரின் பெருக்குப் பதிலாகக் கையளிக்கப்பெற்றவரின் பெயரை இடலாம். தமக்குச் சாதகமான தீர்வையை முதலில் பெற்றவர் விண்ணப்பஞ்செய்தால் அது எவ்விதத்தில் எத்தகைய நிபந்தனைகளுக்கமைய நிறைவேற்றப்படுமோ அதேவிதத்தில் அக்கட்டளை கையளிக்கப்பட்டவர் விஷயத்திலும் நிறைவேற்றப்படலாகும்

43. தீர்வை பூரணமாக நிறைவேற்றப்படுதற்கு முன்னர், கடன் இறுக்கத் தீர்க்கப்பட்டவர் இறந்துபோனால் தந்தமக்குச் சாதகமாகத் தீர்வை பெற்றவர் காலஞ்சென்றவரின் சட்ட பூர்வமான பிரதிநிதிக்கெதிராக அத்தீர்வையை நிறைவேற்றுதற்கு விண்ணப்பம் செய்யலாம்.

அங்ஙனம் விண்ணப்பம் செய்யப்பட்டவிடத்து அவ்விண்ணப்பத்தை ஏன் அனுமதிக்கக் கூடாதென்பதற்குக் குறிக்கப்படும் ஒரு திகதியன்று நியாயம் காட்டும்படி அவ்விண்ணப்பஞ்சார்பாய் அறிவித்தலைக் காலஞ்சென்றவரின் சட்டபூர்வமான பிரதிநிதியிடம் சேர்ப்பிப்பர் (காலஞ்சென்றவரின் ஆதனத்தில்) பிரதிநிதியின் பொறுப்பில் வந்து இதுவரை வேறுவிதமாகக் கையளிக்கப்படாதிருக்கும் அளவுக்கே அத்தகைய பிரதிநிதி உத்தரவாதமுள்ளவராவர்.

இப்பிரமாணத்தின் நோக்கங்களுக்காக " சட்ட பூர்வமான பிரதிநிதி " என்னுஞ் சொற்றொடர் உரிமைத் தத்துவகாரர் அல்லது மரணசாதனத் தத்துவ காரர் அல்லது முறைப்படி நியமிக்கப்பட்ட உரிமைத் தத்துவகாரர் அல்லது மரணசாதனத் தத்துவகாரர் இல்லாதிருப்பின், பிரமாணப்படி உரிமைவரமுள்ள உரிமைகொண்ட கிட்டிய உரித்தாளர் எனப் பொருள்படும்.

44. தீர்வையை நிறைவேற்றுதற்கு விண்ணப்பஞ்செய்து அனுமதிக்கப்பட்டிருந்தவிடத்து அத்தீர்வையை நிறைவேற்றுதற்குப் பிறிதொரு விண்ணப்பம் பின்னர் அனுமதிக்கப்படமாட்டாது

ஆனால் நேர் முந்திய விண்ணப்பத்தின் பேரில் தீர்வையைப் பூரணமாக நிறைவேற்றுதற்குரிய சிரத்தை எடுக்கப்பட்டதென நீதவான் திருப்திப் பட்டால் அல்லது கடன் இறுக்கத் தீர்க்கப்பட்டவரின் வேண்டுகோட்படி தமக்குச் சாதகமாகத் தீர்வை பெற்றவர் தீர்வையைப் பின்போட்டார் என்று நீதவான் திருப்திப்பட்டால் மட்டுமே பிறிதொரு விண்ணப்பம் அனுமதிக்கப்படலாம். மேலும் அத்தகைய பிறிதொரு பிந்திய விண்ணப்பம் பின்வரும் திகதிகளில் எவற்றிலிருந்தாவது பத்து வருடம் கழிந்த பின் அனுமதிக்கப்படமாட்டாது:—

(a) நிறைவேற்றுதற்கு முயலும் தீர்வை செய்யப்பட்ட திகதி அல்லது அப்பீல் செய்யப்பட்டிருந்தால் அந்த அப்பீலில் அத்தீர்வை உறுதி யாக்கப்பட்ட திகதி ; அல்லது

(b) குறித்த திகதியிற் பணம் கொடுக்கும்படி அல்லது ஆதனம் ஒப்படைக்கும்படி தீர்வை அல்லது பிறிதொரு பிந்திய கட்டளை இடப்பட்டிருக்கு மிடத்து, விண்ணப்பம் செய்தவர் தீர்வையை நிறைவேற்ற முயலுகையில் பணத்தைக் கொடுக்கத் தவறிய அல்லது ஆதனத்தை ஒப்படைக்கத் தவறிய திகதி.

(2) கடன் இறுக்கத் தீர்க்கப்பட்டவர் கபடமாகவேனும் பலாத்காரமாகவேனும் விண்ணப்பம் செய்யும் திகதிக்கு நேர் முந்திய பத்து வருட காலத் திற்குள் எப்பொழுதாவது தீர்வை நிறைவேற்றப்படுவதைத் தடுத்திருந்தால், மேற்கூறிய பத்து வருட காலத்தின் பின் தீர்வையை நிறைவேற்றுதற்கான விண்ணப்பம் சமர்ப்பித்தலையும் அதனை நீதவான் அனுமதிப்பதையும் இப்பிரமாணத்தில் உள்ள எதுவும் தடை செய்யாது.

### (b)—தீர்வையை நிறைவேற்றல்.

45. பிசுக்கால் நடுக்கட்டல் அதிகாரப் பத்திரத்தைப் பெற்றதும், கடனாளி பிசுக்காற் கந்தோரில் இருந்து ஐந்து மைலுக்குள் வசிக்கிறவராயிருந்தால், அதிகாரப் பத்திரம் தம்மிடம் சேர்க்கப்பட்ட நேரத்திலிருந்து நாற்பத்தெட்டு மணித்தியாலத்துக்குள், அல்லது கடனாளி ஐந்து மைலுக்கப்பால் வசிப்ப வராயின் ஒவ்வொரு ஐந்து மைலுக்கும், அல்லது அதன் பாகத்துக்கும் கூடுதலாக நாற்பத்தெட்டு மணித்தியாலத்துள் அக்கடனாளி வசிக்கின்ற வீட்டுக்கு அல்லது வாசஸ்தானத்துக்குச் சென்று அங்கே அக்கடனாளி இருந்தால் அதிகார பத்திரத்திற் காட்டிய பணத்தைக் கட்டும்படி கேட்பார். கடனாளி அங்கில்லாத காரணத்தால் பணம் கட்டும்படி கேட்காதிருந்தால், அல்லது அங்ஙனம் கேட்டவிடத்துப் பணம் கட்டப்படாதிருந்தால் கடன் இறுக்கத் தீர்க்கப்பட்டவர் காட்டிக் கொடுத்துச் சமர்ப்பிக்கும் பராதீனமற்ற ஆதனத்தை, அல்லது அங்ஙனம் காட்டத் தவறினால் கடன் பெறத் தீர்ப்பு அளிக்கப்பட்டவர் கடன் இறுக்கத் தீர்க்கப்பட்டவரின் ஆதனத்தில் காட்டுவனவற்றை அல்லது நடுக்கட்டல் அதிகாரப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட ஆதனத்தைப் பிசுக்கால் நடுக் கட்டி விற்று அல்லது வேறுவகையில் பணத்தைப் பெறவேண்டும்.

46. கடன் இறுக்கத் தீர்க்கப்பட்டவரின் சகல அசைவற்ற, அசைவுள்ள ஆதனமும் அவை அவருடைய சொந்தப் பொறுப்பில் இருந்தாலேனும், அவருக்காக அல்லது அவர்பொருட்டு நம்பிக்கைச் சொத்தாக வேறொருவர் பெயரில் இருந்தாலேனும் அவ்வாதனம் யாவும் அவருக்குப் போகவேண்டிய சகல கடன்களும் அதிகாரப் பத்திரத்தை நிறைவேற்றுதற்காக நடுக்கட்டுதற்குரியனவாகும். ஆயினும் அதிகார பத்திரத்திற் காட்டப்பட்டுள்ள கடனாளிக் கெதிராகவுள்ள கடனைத் தீர்த்துக்கொள்ளப் பராதீனமற்ற போதிய அசைவுள்ள ஆதனம் சமர்ப்பிக்கப்பட்டால் அசைவற்ற ஆதனம் நடுக்கட்டப்படமாட்டாது. மேலும்-அதிகாரப் பத்திரத்தை நிறைவேற்றுதற்காகப் பின்வருவனவற்றைப் பிசுக்கால் எடுக்கவேனும் நடுக்கட்டவேனும் கூடாது:—

(a) கடன் இறுக்கத் தீர்க்கப்பட்டவர் தமது சீவியத்தை நடாத்தத் தேவையென நீதவான் கருதும் தொழில் அல்லது மிருக வளர்ப்புக்கு வேண்டிய ஆயுதங்கள், தட்டுமுட்டுகள், உபகரணங்கள் அல்லது கால்நடைகள்.

(b) கடன் இறுக்கத் தீர்க்கப்பட்டவரின் உடைகள்.

(c) தொழிலாளரினதும் வீட்டு வேலையாட்களினதும் சம்பளங்கள்.

(d) அரசாங்க சேவையில் உள்ளவரின் சம்பளம்.

### (c)—நடுக்கட்டும் விதம்.

47. நடுக்கட்டவேண்டிய ஆதனம் அசைவற்ற ஆதனமாயிருப்பின், கடன் இறுக்கத் தீர்க்கப்பட்டவர் அவ்வாதனத்தை கையளிப்பதில் இருந்து அல்லது எவ்வகையிலாவது பாரித்தலிலிருந்து தடுப்பதையும், அதனை அவரிடம் இருந்து கொள்விலையாகவேனும் நன்கொடையாகவேனும் அல்லது வேறெவ்வழியிலேனும் பெறுவதிலிருந்து தடுப்பதையும் காட்டும் அறிவித்தலை, அவ்வாதனத்தில் யாவருக்கும் நன்கு புலப்படக்கூடிய ஓரிடத்தில் பிசுக்கால் ஒட்டுதல் மூலம் அவ்வாதனத்தை நடுக்கட்டவேண்டும். அவ்வறிவித்தல் இத்துடன் உள்ள அட்டவணையில் 6 ம் இலக்க மாதிரிப் பத்திரத்தின் பொருள் அமையப்பெற்றதாதல் வேண்டும்

48. நடுக்கட்ட வேண்டிய ஆதனம் கடன் இறுக்கத் தீர்க்கப்பட்டவர் வசமுள்ள அசைவுள்ள ஆதனமாயிருந்தால் அதனைக் கைப்பற்றிப் பிடிக்க வேண்டும். மேலும், பிசுக்கால் அத்தகைய ஆதனத்தை இயன்றவரை தம் பொறுப்பில் ஏற்கவேண்டும்.

49. கடன் இறுக்கத் தீர்க்கப்பட்டவரின் ஆட்சியில் இல்லாத அசைவற்ற ஆதன விஷயத்தில் கோட்டு வீட்டில் யாவர்க்கும் புலப்படக்கூடிய ஓர் இடத்தில் இத்துடனுள்ள அட்டவணையில் 7 ம் இலக்க மாதிரி பத்திரத்தின் பொருளமையப்பெற்ற எழுத்துமூலமான அறிவித்தலை ஒட்டுதலாலும், அவ்வா தனத்தை ஆட்சி செய்பவருக்கு அவ்வறிவித்தலின் பிரதியொன்றை அல்லது சேர்ப்பிக்கப்படுதலால் தபால் மூலம் அனுப்புதலால் அவ்வாதனம் நடுக் கட்டப்படும். கடன் விஷயத்தில் நடுக்கட்டலைப்பற்றிய அறிவித்தல் இத்துடனுள்ள அட்டவணையின் 8 ம் இலக்க மாதிரிப் பத்திரத்தின் பொருள் அமையப் பெற்றதாய் எழுதப்பட்டு கோட்டு வீட்டில் யாவர்க்கும் புலப்படக்கூடிய ஓர் இடத்தில் ஒட்டப்படும். அதன் பிரதிகள் கடனாளிகள் ஒவ்வொருவருக்கும் சேர்ப்பிக் கப்படும் அல்லது தபால்மூலம் அனுப்பப்படும்.

50 கட்டளையை நிறைவேற்றற்காக யாதேனும் ஆதனம் முறைப்படி நடுக்கட்டப்பட்ட பின்னரும், மேற்கூறியவாறு எழுத்துமூலமான கட்டளை முறைப்படி அறிவிக்கப்பட்டு பிரசித்தப்படுத்தப்பட்ட நடுக்கட்டல் விஷயத்திலும் (பிசுக்காலால் அல்லது இதனைத்தொடர்ந்து பின்னர் ஏற்பாடு செய்தவாறு அவருடைய கட்டளைப்படியல்லாது) நடுக்கட்டிய ஆதனத்தை விலையாக, நன்கொடையாக, ஈடாக அல்லது வேறு வகையாகப் பாரித்தல் அல்லது பராதீனப் படுத்தலும், நடுக்கட்டியிருக்கும்பொழுது, கடன் இறுக்கத் தீர்க்கப்பட்டவருக்கு யாதேனும் கடன் அல்லது கடன்கள் கொடுத்தலும் அழிந்து பெலமற்றன வாகும்.

51. ஒரு கடனாளி தனது கடனுக்காகக் கடன் கொடுத்தவருக்குப் பணம் கட்டுதல் தடுக்கப்பட்டிருக்கும் விஷயத்தில், அவர் அத்தொகையைப் பிசுக்காலிடம் கட்டலாம். அங்ஙனம் கட்டினால் அது கடன்கொடுத்தவரிடம் கட்டியதுபோலவே கருதப்படும்.

52. பிசுக்கால் எந்த ஆதனத்தையாவது நடுக்கட்டியவுடன் அவர் அல்லது அதனை நடுக்கட்டியவர் அத்தகைய ஆதனத்தின் அட்டவணை ஒன்றை உடனே தயாரித்து அதற்குக் கையொப்பமிட்டு, நடுக்கட்டிய ஆதனம் எவருடைய ஆட்சியிலிருக்கின்றதோ அவருக்குச் சோபபித்தல் வேண்டும் அல்லது ஒருவருடைய ஆட்சியிலும் இல்லாதிருந்தால் நடுக்கட்டல் நடைபெற்ற பிரிவுக்குரிய கிராமத்தலைமைக்காரனிடம் அவ்வட்டவணையைச் சோபபித்தல் வேண்டும். மேலும் அதன் பிரதிகள் பிசுக்கால் கந்தோரில் வைக்கப்படுவதுடன் அதிகாரபத்திர அறிக்கையுடன் சேர்த்து வைக்கவும்படும்.

53. ஆதனம் நடுக்கட்ட அல்லது பிடித்துப் புறம்புபண்ணி வைக்கப் போதிய வசதிகள் இல்லாத இடங்களில் ஆதனம் நடுக்கட்டப்பட்ட அல்லது பிடித்துப் புறம்புபண்ணி வைக்கப்பட்டவிடத்து பாதுகாப்புக்குத் தகுந்த இடத்துக்கு அதனைப் பிசுக்கால் கொண்டுபோகச் செய்யலாம் அல்லது அவ்வாதனத்தின் சொந்தக்காரன் அல்லது அதனை ஆட்சியில் வைத்திருப்பவர் அதனை விற்கும்வரை பத்திரமாகப் பாதுகாத்து வைத்திருப்பார் என்பதுபற்றித் தாம் திருப்திப்படக்கூடியதாகப் பிணை அளித்தலின்பேரில் விற்குமவரை அவ்வாதனத்தை அதன் சொந்தக்காரனோ அல்லது அதனை ஆட்சியில் வைத்திருப்பவரோ பொறுப்பேற்கும்படி பிசுக்கால் கேட்கலாம். அப்படியான சொந்தக்காரன் அல்லது ஆட்சியில் வைத்திருப்பவர் அத்தகைய பிணை கொடுக்கத் தவறினால், நடுக்கட்டல் எடுத்த கட்சி பிசுக்கால் திருப்திப்படக்கூடிய வகையில் அதேவித பிணைகொடுத்து ஆதனத்தின் பொறுப்பை ஏற்கும்படி கேட்கப்படலாம். நடுக்கட்டல் பிறப்பிக்கும்படி வழக்குத்தொடர்ந்த கட்சி அங்ஙனம் ஆதனத்தைப் பொறுப்பேற்கும்படி அல்லது பிணை கொடுக்கும்படி கேட்கப்பட்டவிடத்து அப்படிச் செய்யத் தவறினால் பிசுக்கால் அதனைப்பற்றிய விசேஷ அறிக்கை ஒன்றினை நீதவானுக்கு அனுப்புதல் வேண்டும். அதன்பின் அவ்வாதனத்துக்கு ஏற்படும் எவ்வித நட்டம், அழிவு, சிதைவு என்பவற்றுக்கு பிசுக்கால் பொறுப்பாளியாகார்.

### (d)—நடுக்கட்டலை விட்டுவிடுதல்.

54. நடுக்கட்டிய ஆதனத்தில் உரித்துள்ள எவராவது விண்ணப்பித்தவிடத்து தீர்வைப்படி கொடுக்கவேண்டியது கொடுபட்டவிடத்து நடுக்கட்டலை விட்டுவிடும்படி நீதவான் பிசுக்காலுக்குக் கட்டளையிடுவார்.

### (e)—ஆதனத்தை விற்றல்.

55 ஆதனம் முறையாக நடுக்கட்டப்பட்டதும் கீழே காட்டியவாறு அதனை விற்க பிசுக்கால் தொடங்கவேண்டும்:—

(i) அசைவுள்ள ஆதனத்தை நடுக்கட்டிய சகல சந்தர்ப்பங்களிலும் விற்பனை செய்யும் இடத்திலும் அது நடுக்கட்டப்பட்ட இடத்திலும் பறையடித்தல் மூலம் அல்லது வேறுவகையில் பிரசித்தம் செய்தல் மூலம் அதன் விற்பனையைப்பற்றிய அறிவித்தலை பிசுக்கால் முறையே செய்வித்தல் வேண்டும். விற்கப்படும் ஆதனத்தின் விவரம், அது தீர்ந்த வழக்கு, விற்கப்பட வேண்டிய இடம், நாள், மணி என்பன வற்றைக் காட்டிக் குறிப்பிட்டு, நீதவான் தனது கட்டளை மூலம் அறிவித்தற் காலவெல்லையை நீடித்தால் ஒழிய, அத்தகைய அறிவித்தல் விற்பனைத் திகதிக்கு முன் மூன்று நாட்களுக்குக் குறையாமலும் பதினைந்து நாட்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ii) அசைவற்ற ஆதனத்தை நடுக்கட்டும் சகல சந்தர்ப்பங்களிலும் அசைவுள்ள ஆதன விற்பனைகள் விஷயத்தில் இத்தகைத்து முன்னர்க் குறிப்பிட்ட அதேவித விற்பனை அறிவித்தல், கொடுக்கப்படவேண்டும். (ஆங்கிலத்திலும் நடுக்கட்டலதிகாரம் பிறப்பித்த கோட்டில் உபயோகிக்கப்படும் பாஷையிலும்) பிசுக்கால், அவ்விற்பனை அறிவித்தலில் நான்கு பிரதிகள் தயாரித்து, அவற்றுள் ஒன்றைத் தமது கந்தோரிலும், இரண்டாவது பிரதியை நடுக்கட்டல் அதிகாரம் பிறப்பித்த கோட்டுவீட்டிலும், மூன்றாவது பிரதியை அந்தக் காணியுள்ள கிராமத்தில் அல்லது பட்டினத்தில் யாவாக்கும் நன்கு புலப்படக்கூடிய ஓரிடத்திலும், நான்காவது பிரதியை விற்பனைக்குரிய ஆதனத்தில் யாவாக்கும் நன்கு புலப்படக்கூடிய ஓரிடத்திலும் ஒட்டுவிப்பார். அத்தகைய ஒவ்வொரு அறிவித்தலும், விற்பனை நடைபெறுவதற்குக் குறைந்தபட்சம் பத்து நாட்களுக்கு முன் ஒட்டப்படும்.

(iii) நடுக்கட்டிய திகதியில் இருந்து இருபத்தொரு நாட்கள் கழியும் வரை நடுக்கட்டிய எந்த ஆதனத்தினதும் விற்பனை நடை பெறக்கூடாது.

56. பிசுக்கால் உத்தியோகத்தரால் அல்லது பிசுக்கால் கையொப்பமிட்டு முறைப்படி அதிகாரம் அளிக்கப்பெற்ற வேறொருவரால் ஒவ்வொரு விற்பனையும் நடாத்தப்படும்.

57. அசைவுள்ள, அசைவற்ற சகல ஆதனங்களையும் ரொக்கப்பணத்துக்காகமட்டுமே விற்பனை செய்யப்படும்.

58. அசைவற்ற ஆதனத்தை விற்குமிடத்து கூடிய தொகை கேட்ட கொள்வனவுகாரன் தாமே கொள்வனவுகாரன் என வெளிப்படுத்தப்பட்டதும் அந்தக் கொள்வனவுப் பணத்தொகையை உடனே கட்டாவிட்டால் அவருக்கு அடுத்ததாகக் கூடிய தொகையைக் கேட்டவரே ஆதனத்தின் கொள்வனவுகாரனாக வெளிப்படுத்தப்படுவர். மேற்சொல்லியவாறு முதலிற் பணம் கட்டத் தவறியவர் தாம் கேட்ட தொகைக்கும் விற்பனை செய்யப்பட்ட தொகைக்கும் உள்ள வித்தியாசத் தொகையை கட்டுதற்குப் பாத்திரராவார். மேலும், பிசுக்கால் எழுத்து மூலம் அத்தகைய ஆட்களிடம் பணத்தைக் கட்டும்படி கேட்டவிடத்து அவர்கள், அப்படிக் கேட்ட ஒரு கிழமைக்குள் கட்டத் தவறினால் அப்படியான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஏற்படும் குறித்த வித்தியாசத் தொகையைப்பற்றி பிசுக்கால் தீர்வையை கட்டளை பிறப்பித்த கோட்டின் நீதவானுக்கு அத்தொகையைப்பற்றி அத்தாட்சிப்பத்திரம் அனுப்புவார்.

59 தாமாகச் செய்த அல்லது தமது அதிகாரத்தின்படி செய்யப்பட்ட ஒவ்வொரு அசைவற்ற ஆதனவிற்பனை பற்றியும் விற்பனை முடிந்து ஒரு கிழமைக்குள் பிசுக்கால் அறிவிப்பார். குறித்த விற்பனை ஒழுங்கீனமானது அல்லது முறையற்றது என்ற நியாயம்பற்றி கடன்காரன் அல்லது அவ்விற்பனையிற் குற்றம் காட்டும் வேறு எந்தக் கட்சியும், அல்லது விற்பனை நடந்து முப்பது நாட்களுக்குள் அத்தகைய நியாயமெதுவும் பிசுக்காலுக்கு எடுத்துக் காட்டப்பட்டால் அந்தப் பிசுக்காலும், விற்பனையை உறுதிப்படுத்துவதற்கு எதிராகத் தமது தடைகளைப் கேட்டுக்கு அவர் கூறலாம் அல்லது அறிவிக்கலாம். நீதவான் அதனைச் சுருக்க முறையாக விளங்கித் தமக்கு நீதி நியாயமானதெனத் தோற்றுகிறபடி விற்பனையை உறுதிப்படுத்துவார், அல்லது அதனைத் தள்ளிவிடுவார். ஆனால் விற்பனையைப் பிரசித்தஞ்செய்தல் அல்லது அந்த விற்பனை நடத்துதலில் முக்கியமான ஒழுங்கீனம் இருப்பதாகவும், அத்தகைய ஒழுங்கீனம் காரணமாக விண்ணப்பக்காரன் பலத்த நட்டம் அடைய நேரிட்டதெனவும் காட்டப்பட்டாலன்றி எந்த விற்பனையும் தள்ளிவைக்கப்படமாட்டாது.

இப்பிரமாணத்தின் ஏற்பாடுகளின்படி காணி விற்பனையை உறுதிப்படுத்தும் கட்டளை இத்துடனுள்ள அட்டவணையின் 9 ம் இலக்க மாதிரிப் பத்திரத்தின் பொருள் அமையப்பெற்றதாயிருத்தல் வேண்டும்.

60. விற்பனையை உறுதிப்படுத்துதற்கு எதிராகவுள்ள தடைகள், விற்பனை நடந்த திகதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் செய்யப்பட்டாலன்றி, ஒழுங்கீனம் அல்லது முறையற்றது என்ற நியாயம்பற்றி எந்த விற்பனையும் தள்ளிவைக்கப்படமாட்டாது.

61. விற்பனையை நீதவான் தள்ளிவைக்காது, கொள்வனவுகாரன் கொள்விலையைக் கட்டி, தனக்கு விற்கப்பட்ட காணிக்கு அறுதியுறுதி முடிப்பதற்குச் சட்டமுறைப்படி தேவைப்படும் முத்திரைகளை (கொள்விலை முழுவதையும் கட்டும்பொழுதே அவர் முத்திரைகளையும் கொடுக்கவேண்டும்). பிசுக்காலிடம் கொடுத்துவிட்டால், இத்துடன் உள்ள அட்டவணையில் 10 ம் இலக்க மாதிரிப் பத்திரத்தில் இரட்டைப் பிரதிகளில் அவ்வாதனத்துக்குரிய அறுதியுறுதி முடித்துக்கொடுக்க வேண்டும், அத்தகைய அறுதி உறுதி முடித்தல், ஓர் பிரசித்த நொத்தாரிஸ் முகதாவில் முடிக்கப்படாதிருந்த போதிலும் கட்டுப்படுத்துவதாயும் பலமுடையதாயுமிருக்கும். பிசுக்கால் மூலப் பிரதியைக் கொள்வனவுகாரனிடம் கொடுத்து இரட்டைப் பிரதியை, நொத்தாரிஸ்மார் முடிக்கும் உறுதிகள் சம்பந்தமாகத் தற்போது செய்யும் முறைப்படி அல்லது இனிமேல் கேட்கப்பட்டவிடத்துச் செய்யும் முறைப்படி அக்காணியுள்ள டிஸ்திறிக்கின் காணிப் பதிவுக்காரியஸ்தருக்கு அனுப்பவேண்டும்.

62. கொள்வனவுகாரன் அதற்கெனவுள்ள முழுச் செலவையும் முற்பணமாகக் கொடுத்தால் காணியின் குறிப்புப்படம் அல்லது படம் சேர்ப்பட்டு பிசுக்காலின் அறுதி உறுதியுடன் சேர்க்கப்படும்.

63. எந்தக் கோட்டுத் தீர்வையை நிறைவேற்ற ஆதனம் விற்கப்படுகிறதோ அத்தீர்வையைப் பெற்றவர் கோட்டாரின் அநுமதியை ஏற்கெனவே பெற்று நீதவான் நிச்சயிக்கும் விலைக்கு அவ்வாதனத்தைக் கொள்ளலாம், அல்லது விலை கேட்கலாம்.

64. எந்தக் கட்சியினர் சார்பாகத் தீர்வை நிறைவேற்றப்படுகிறதோ அக்கட்சியினர் விற்கப்பட்ட ஆதனம் எதனையும் கொள்வனவாகக் கொண்டால், அவர் உரித்துக்கேட்ட தொகையிலிருந்து அக்கொள்விலைத் தொகையைக் கழித்துவிட அநுமதிக்கப்படுவார். கொள்விலைத் தொகை, உரித்துக்கேட்ட தொகையிலும் கூடியதானால், நீதவான் வேறு விதமாகக் கட்டளையிட்டாலன்றி, மிச்சத் தொகையை மாத்திரமே அவர் கட்டவேண்டும்.

### பிசுக்காலுக்குக் கட்டிய பணங்களும், அவர் பெற்றுக்கொண்ட பணங்களும்.

65. விற்பனை நடத்தும் உத்தியோகத்தரிடம் கொடுக்கப்படும் சகல பணத்திற்கும், அவற்றை ஏற்றுக்கொண்டதற்காகப் பற்றுச்சீட்டு அளிக்கப்படும். அவ்வுத்தியோகத்தர் அங்ஙனம் தாம் பெற்ற பணத்தை, பெற்ற திகதியிலிருந்து பிசுக்கால் கட்டளையிடும் காலத்திற்குள் மாகாண அதிபரின் அல்லது உதவி மாகாண அதிபரின் கந்தோரிற் கட்டுதல் வேண்டும்.

மாகாண அதிபர் அல்லது உதவி மாகாண அதிபர் நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுள் பிசுக்காலுக்கு ஒரு பற்றுச்சீட்டு அனுப்புவார். அப்படிப் பற்றுச் சீட்டுப் பெற்றதும் எந்த நடுக்கட்டல் அதிகாரத்தின்படி விற்பனை நடைபெற்றதோ அந்த நடுக்கட்டலதிகாரப் பத்திரத்தைத் தமது அறிக்கையுடன் பிசுக்கால் நீதவானுக்குத் திருப்பி யனுப்புவார்.

66. மாகாண அதிபரின் அல்லது உதவி மாகாண அதிபரின் கந்தோரிற் கட்டப்படும் சகல பணமும் நடுக்கட்டலதிகாரம் பிறப்பித்த நீதவானிடும் உத்தரவின்படி உபயோகிக்கப்படும்வரை வைத்திருக்கப்படும்.

### (*f*)—நடுக்கட்டிய ஆதனத்துக்கு உரித்துக்கேட்டல்.

67. கோட்டுத்தீர்வை அல்லது கோட்டுக் கட்டளையை நிறைவேற்றுவதற்காக அசைவற்ற அல்லது அசைவுள்ள ஆதனத்தை நடுக்கட்டியதற்கு அல்லது விற்பனை செய்தற்குத் தடை கூறுமிடத்து அல்லது ஏதும் உரித்துக் கேட்குமிடத்து அங்ஙனம் உரித்துக்கேட்பதையும் அல்லது தடைகூறியதையும் நடுக்கட்டலதிகாரப்பத்திரம் பிறப்பித்த கோட்டுக்கு அதனைத் தாம் பெற்றதும் பிசுக்கால் அனுப்புவார். அதன் பேரில் கோட்டார் அந்நகைய உரித்துக்கேட்டலை அல்லது தடை கூறுதலை, அவ்வழக்கில் உரித்துக்கேட்பவர் அல்லது தடைகூறுபவர் குறித்த வழக்கில் ஒரு கட்சியினர் என்ற முறையில், சுருக்க முறையாக விளங்குவார்.

68. உரித்துக்கேட்டல் அல்லது தடைகூறுதல் இயன்றவரை விரைவிற் செய்யப்படுதல் வேண்டும். உரித்துக் கேட்டல் அல்லது தடைகூறுதல் சம்பந்தமான ஆதனத்தை விற்க நிச்சயித்திருந்தால் நடுக்கட்டல் அதிகாரப்பத்திரம் பிறப்பித்த கோட்டின் கட்டளையின் பேரில் அவ்விற்பனையை (பிசுக்கால் தேவையெனக்கண்டால்) பின்போடலாம்.

69. எக்கட்சியினருக்கெதிராகத் தீர்வை நிறைவேற்றப்படுகிறதோ அக்கட்சியினரின் ஆட்சியில் அல்லது அவரின் நம்பிக்கைச் சொத்தாக வேறொருவரின் ஆட்சியில் அத்தகைய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் இருக்கவில்லையென அல்லது அந்த ஆதனம் நடுக்கட்டப்படும் சமயத்தில் அது வேளாண்மை செய்பவர்களின் அல்லது அவருக்கு வாடகை கொடுப்பவரின் அல்லது சேவை செய்பவர்களின் அநுபவிப்பில் இருக்கவில்லையென, அல்லது கடனாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டவர் அத்தருணத்தில் தாமே அவ்வாதனத்தின் ஆட்சியையுடையவராயிருந்தும் தம்பொருட்டு அல்லது தம் சொந்த ஆதனமாக ஆட்சியில் இராமல் வேறொருவருக்காக அல்லது வேறொருவரின் நம்பிக்கைச் சொத்தாக, இருந்ததென நீதவான் திருப்திப்பட்டால், அவர் அவ்வாதனத்தை நடுக்கட்டுவதிலிருந்து முற்றுக்கேனும் தாம் தகுதியெனக் கருதிய அளவுக்கேனும் நீக்கிவிடும்படி கட்டளையிடுவார். எக்கட்சியினருக்கெதிராகத் தீர்வை நிறைவேற்றப்படுகிறதோ அக்கட்சியினரின் ஆட்சியில் வேறொருவருக்காகவன்றி தமது சொந்த ஆதனமாக இருந்ததெனவும், வேறொருவருக்காக அல்லது அவர்பொருட்டு நம்பிக்கைச் சொத்தாக வேறு எவரிடமேனும் ஆட்சியில் இருந்ததென, அல்லது அவ்வாதனம் நடுக்கட்டப்படும் சமயத்தில் வேளாண்மை செய்பவர்களின் அல்லது வாடகை கொடுக்கும் வேறு ஆட்களின் அல்லது அவருக்குச் சேவை செய்பவர்களின் அநுபவிப்பில் இருந்ததென நீதவான் திருப்திப்பட்டால் அவர் அப்படியான உரித்துக்கேட்டலைத் தள்ளிவிட்டு விற்பனையை நடத்தும்படி கட்டளையிடுவார்.

70. முற்போந்த பிரமாணப்படி எந்தக் கட்சியினருக்கெதிராகக் கட்டளை பிறப்பிக்கப்படுகிறதோ அக்கட்சியினர் பிணக்கேற்பட்டுள்ள ஆதனத்தில் தாம் கேட்கும் உரித்தை நிலைநாட்டுதற்காக, அல்லது தமக்குச் சாதகமாகப் பெற்ற தீர்வையை நிறைவேற்றும் பொருட்டு குறித்த ஆதனம் விற்கப்படக் கூடுமென வெளிப்படுத்துவித்தற்காக தகுதியுள்ள ஓர் கோட்டில் தாம் கட்டளை பெற்ற பதினான்கு நாட்களுக்குள் வழக்கைத் தொடரலாம். அப்படித் தொடரப்பட்ட வழக்கின் பலாபலனுக்கமைவாகக் குறித்த கட்டளை முடிவானதாகும்.

### ஆட்சி கையளித்தல்.

71. குறித்த தீர்ப்பு குற்றவாளியாக்கப்பட்ட கட்சியினர் அல்லது அவர் பொருட்டு வேறொருவர் வசிக்கும் நிலம் சம்பந்தமானதாக விருப்பின் எக்கட்சியினர் சார்பாக அக்காணி தீர்ப்பளிக்கப்பட்டதோ அவருக்கு அல்லது அவர் பொருட்டு அக்காணியைப் பெறும்படி அவர் நியமிக்கும் வேறொருவருக்கு அக்காணியின் ஆட்சியைக் கொடுப்பதால் அது கையளிக்கப்படும்.

72. குறித்த தீர்ப்பு வேளாண்மை செய்பவர்கள், குடிக்கூலிக்கிருப்பவர்கள் அல்லது நிலத்தில் வசிக்க உரித்துண்டைய வேறு ஆட்கள் வசிக்கும் நிலம் சம்பந்தமானதாகவிருப்பின் அந்நிலத்தில் நன்கு புலப்படக்கூடிய இடத்தில் நடுக்கட்டல் அதிகார பத்திரத்தின் பிரதியை ஒட்டுவதாலும் வசதியான இடத்தில் பறையடித்தல் மூலமாக அல்லது வழக்காற்றில் உள்ள வேறு வகையில் அவ்வாதனம் சம்பந்தமான தீர்ப்பின் சாரத்தை அதில் வசிப்பவர்களுக்கு வெளிப்படுத்திக் கூறுதலாலும் அக்காணி கையளிக்கப்படும்.

73. விற்கப்பட்ட ஆதனத்தில் கடன் இறுக்கத் தீர்க்கப்பட்டவர் அல்லது அவர் சார்பாக வேறு ஒருவர் வசிக்குமிடத்தும், 61 ம் பிரமாணப்படி கொள்வனவுகாரனுக்கு அறுதியுறுதி முடிக்கப்பட்டவிடத்தும், கொள்வனவுகாரன் அல்லது தம் பொருட்டுக் கையேற்கக் கொள்வனவுகாரன் நியமிக்கும் வேறு ஒருவர் விண்ணப்பம் செய்தால் நீதவான் அக்கொள்வனவுகாரனிடம் அல்லது அவர் நியமிக்கும் வேறு ஒருவரிடம் அவ்வாதனத்தின் ஆட்சியைக் கையளிக்கச் செய்வர்.

இப்பிரமாணத்தின் ஏற்பாடுகளின்படி ஆட்சியைக் கையளிக்கும் கட்டளை இத்துடன் உள்ள அட்டவணையின் 11 ம் இலக்க மாதிரிப் பத்திரத்தின் பொருளமையப்பெற்றதாயிருக்கும்.

74. போதிய நியாயம்பற்றி கட்டளை நிறைவேற்றலை எத்தறுவாயிலும் நீதவான் நிறுத்தி விற்பனையைப் பின்போடக் கட்டளையிடலாம்.

கட்டளை நிறைவேற்றலை நிறுத்திவைக்கக் கோட்டுக்கு எழுத்து மூலமாகவேனும் வாய்ச்சொல் மூலமாகவேனும் விண்ணப்பிக்கலாம். மேலும் அத்தகைய விண்ணப்பத்தின் அறிவித்தலை அக்கட்டளை நிறைவேற்றலிற் சம்பந்தப்பட்ட சகல கட்சியினருக்கும் நீதவான் சேர்ப்பிக்கச் செய்வர். அத்தகைய கட்டளை, அப்பொழுது சேரவேண்டிய பிசுக்கால் வேதனம் முழுவதும் கட்டப்பட்ட பின்னன்றி இடப்படமாட்டாது.

### வழக்குப் புத்தகங்களை அழித்தல்.

75 காணி வழக்குகள் சம்பந்தமான வழக்குப் புத்தகங்கள் எப்பொழுதாவது அழிக்கப்படாது கவனமாகப் பாதுகாக்கப்படல் வேண்டும்.

76. பண வழக்குகள் சம்பந்தமான வழக்குப் புத்தகங்கள், தீர்வை நிறைவேறியதை முடிவாக எழுதப்படாதன தவிர, தீர்ப்பளிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று வருடம் சென்றபின் அழிக்கப்படலாம்.

77. எந்த வழக்குப் புத்தகங்களையாவது அழிப்பதற்குமுன், அத்தகைய புத்தகங்களை அழிப்பதற்கு நிச்சயிக்கப்பட்ட திகதிக்கு குறைந்தபட்சம் ஒரு மாதத்துக்கு முன்னரே அவ்வழக்கில் சாட்சியமாக அணைக்கப்பட்ட சாதனம் எதனையும் எவராவது பெறுவதற்கு விண்ணப்பிக்கும்பொருட்டு, ஓர் அறிவித்தல் கோட்டில் ஒட்டப்படல் வேண்டும்.

### சொற்பொருள் விளக்கம்.

78. இந்தப் பிரமாணங்களில்—

" கோடு " என்பது இச்சட்டத்தின்படி நிறுவப்பெற்ற அல்லது நிறுவப்பெற்றதாகக் கருதப்படும் யாதேனும் கிராமாந்திரக்கோடு எனப் பொருள்படும்.

" டிஸ்திறிக் நீதவான் " என்பது மேலதிக டிஸ்திறிக் நீதவானையும் உட்படுத்தும்.

" பிசுக்கால் " என்பது பிசுக்கால் நியமிக்கப்பட்ட மாகாணத்துக்குள் உள்ள பிரதி பிசுக்காலையும் உட்படுத்தும்.

" சட்டம் " என்பது 1945 ம் ஆண்டின் 12 ம் இலக்கக் கிராமாந்தரக் கோட்டுச் சட்டம் எனப் பொருள்படும்.

" நீதவான் " என்பது கிராமாந்தரக்கோட்டு நீதவான் எனப் பொருள்படும்.

### நிவாரணம்.

79. 1927 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18 ந் திகதியைக்கொண்ட 7,568 ம் இலக்க " கெசெற் " பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கிராமக் கோட்டுக்கான சிவில் வழக்குப் பிரமாணங்களும் அவற்றைப் பின்னாத் திருத்திய பிரமாணங்களும் இத்தால் நிவாரணமாக்கப்படுகின்றன.

## அட்டவணை.

### 1 ம் இலக்க மாதிரிப்பத்திரம்.

### எதிரிக்கு விடும் சித்தாசி.—(சிவில் பிரமாணம் 4).

————உள்ள கிராமாந்தரக் கோட்டிலே.

————குடி————வழக்காளி

————குடி————எதிரி

வழக்கு இல :————

மேற்சொல்லிய எதிரிக்கு (அல்லது எதிரிகளுக்கு)

இந்தக் கிராமாந்தரக் கோட்டில் மேற்சொல்லிய வழக்காளி உமக்கு எதிராக————(உரித்துக்கேட்டலின் விபரம் கூறுக) என்று ஓர் வழக்குத் தொடர்ந்திருக்கிறபடியால், மேற்சொல்லிய வழக்காளிக்கு மறுமொழி சொல்லும்படி 19——ம் ஆண்டு————மீ————ந் திகதியின்று முற்பகல் 9.30 மணிக்கு இந்தக் கிராமாந்தரக் கோட்டில் நீர் நேர்முகமாகவந்து தெரிசப்பட வேண்டுமென இத்தால் கற்பிக்கப்படுகின்றீர். மேலும் அப்படி நீர்

வந்து தெரிபடத்தவறினுல் நீா வராதிருநதும வழக்கு விளங்கப்படடுத தீர்ப்புக கொடுக்கப்படுமெனறு இத்தால் அறிநதுகொளளககடவீா. மேலும், உமது பககத்து நியாயத்துக்கு ஆதாரமான சாதனங்கள் உண்டாளுல் அவறறையும கொணடுவருதல் வேணடும்.

19——ம ஆண்டு——————மீ——ந உ.

கிராமாநதரக் கோடடு நீதவான அலலது லிகிதா.

குறிப்பு.—(1)—உமது பக்கத்துச சாட்சிக்காராகள தாங்களே சம்மதபபடடு இககோடடுககு வரமாடடாாகள எனறு உமககுப பயமிருந்தால, எந்த ஒரு சாட்சிகாரனேயும் வருவித்தறகும், நீர் பார்வையிட உரித்துளள பததிரமெதையும கொண்டுவருமபடி செயதறகும கட்டாயபபடுததுதறகாக இககோட்டில் வழக்கு விளக்கத்துக்கு முன நியாயமான நேரகாலத்தோடு ஒரு சித்தாசியை நீா கேடடுக பெறறுககொளளலாம.

குறிப்பு (2)—வழக்கிற் கேட்கபபடடது சரிதான எனறு நீா ஏறறு ஒததுககொண்டால், உமது ஆதனததுககு மாறுகக கோடடுத தீரபபு சுருககமுறையில நிறைவேறறுவதைத் தடுக்கும பொருடடு, வழக்குச் செலவுடன அநதப பணத்தையும் கோடடிலே கடடவேணடும

### 2 ம் இலக்க மாதிரிப்பத்திரம்.

**சாட்சிக்கு விடும் சித்தாசி.—(சிவில் பிரமாணம் 5).**

————உளள கிராமாந்தரக் கோடடிலே

————குடி————வழக்காளி

————குடி————எதிரி

வழக்கு இல. ————.

சாடசியின பெயர், விபரம, விலாசம்).

மேறசொல்லிய வழககில் வழககாளி (அலலது எதிரி) சாாபாகச சாட்சியம கொடுபபதறகும அலலது கொணடுவநது காடடவேண்டிய சாதனம (இவ்விடத்து இயனறவரை திட்டமாக விபரிகக) எதுவேனும் இருபபின அதனைக கொணடுவநது காட்டுவதறகு(ம) 19——ம ஆண்டு————மீ——ந திகதியனறு முற்பகல்————மணிககு இந்தக கோடடில் நீா நோமுகமாக வநது தெரிபடல வேணடுமென இததால கறபிககபபடுகினறீா. சாட்சியம கொடுக்க மாத்திரம அல்லது ஒரு சாதனம கொண்டுவந்து காடட மாததிரம் சிததாசி பிறபபிககபபடின அது தெளிவாகக குறிபபிடப்படல வேண்டும். மேலும நீா விளங்கப்பட்டு (அல்லது சாதனம் கொணடு வந்து காடடி) கிராமாநதரககோடு முடியுமவரை அலலது கிராமாநதரக கோட்டின உத்தரவினறி அங்கிருநது அகலககூடாது.

கிராமாந்தரக் கோட்டு நீதவான அல்லது லிகிதர்.

19——ம ஆணடு ————மீ————ந உ.

குறிப்புகள.—

### 3 ம் இலக்க மாதிரிப்பத்திரம்.

**வழக்குப் பதிவு இடாப்பு.**

| வழககின இலககம | வழக்குத் தொடரப் பெறற திகதி | கடசியினரின பெயாகள் | வழக்கு விபரம | உரிததுக கேட்கும தொகை ரூ. ச. | வழககு முடிவுறற திகதி. | மேக் கோட்டின முடிவு | அபபீலின முடிவும அறிவித்த திகதியும் | தீர்பபு நிறை வேறிய திகதி | குறிபபுகளை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

### 4 ம் இலக்க மாதிரிப்பத்திரம்.

19 ———— ம ஆணடு ———— முடியவுளள ———— காலததில ———— நீதவான செயத வேலை விபரததிரட்டு.

| | | | | சிவில வழககுகள | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | தீாககபபடடவை | | | | | |
| | முடிவு பெருத வழககுகள | தொடரப பெறற வழககுகள | மொததம. | ஒபபுககொண டதால, அல் லது வநது தெரிபடத தவறியதால | பரஸபர சம் மதததால | கடசியினரை விளங்கிப பெறறசாடசி யத்தால | வேறு வகையால | மொததம | முடிவு பெருதன |
| இவ்வருடம ஏறகெனவே அறிவிககபபடடவை<br>சிவில | | | | | | | | | |

### 5 ம் இலக்க மாதிரிப்பத்திரம்.

**ஆதனத்தை நடுக்கட்டும் அதிகாரப் பத்திரம்.—(சிவில் பிரமாணம் 50).**

————உளள கிராமாநதரக கோடடிலே

————குடி————வழககாளி

————குடி————எதிரி

———— மாகாண பிசககாலுககு

இல.————

ரூ. ச. மேறகுறிதத————

| | ரூ. ச. |
|---|---|
| தீர்ப்பு .. | |
| செலவு .. | |
| | ———— |
| ரூபா .. | |
| | ———— |

————இன வீடுகள, காணிகள, பொருடகள, கடனகள, வருமதிகள ஆகியவறறை நடுககடடி, தேவை எனக் கணடால விறறு ரூபா————சதம——ஆகிய தொகையை அறவிடடுச சோகக மேறகுறிதத தொகையை இநதக் கோடடின கடடளைபபடி மேறகுறிதத———— மேறசொலலிய ———— இடமிருநது அறவிடபபடடதாகும. அடுதத 19——ம ஆணடு ———— மீ ———— ந திகதியிலனறு அலலது அதறகு முனனா மேலும குறிதத ஆதனஙகளை முறையே எவவெத தொகைககு யாாயாருககு விறறீா எனபதை அடுதத 19——ம ஆணடு————மீ——ந திகதியிலனறு அலலது அதறகு முனனா இநதக கோடடுககு அறிவிபபீராக. இவவதிகாரப பததிரததை உம வசததில வைததுக கொளவீராக.

19——ம ஆணடு————மீ——ந உ.

,————நீதவான்,

### 6 ம் இலக்க மாதிரிபபத்திரம்.

அசைவற்ற ஆதன விஷயததில விடுக்கும் தடை அறிவிததல் மாதிரிப்பத்திரம்.

————(எதிரி)ககு

————சாதகமாக,————ரூபாவுககு (குறிதத பிரிவினபடி தேவையான விபரஙகளை இஙகே குறிபபிடுக) 19——ம ஆண்டு————மீ——ந திகதி யிலனறு————வழககில (வழககின தனமை முதலியனவறறைக குறிகக) அளிககபபடட தீர்வையை நீர் அநுசரித்து நடககத் தவறியதால் குறித்த வழககில தீர்வை நிறைவேறறல பிறபபிககபபடட கோடடிலிருநது இனிமேல சிறிது கடடளை இடப்படுமவரை இதனுடன உளள அட்டவணையிற் காட்டிக் குறிககப்படடுளள ஆதனததை எவவகையிலாவது கையளிததல, பாராதீனபபடுததல, அல்லது பாரிதநல செயயலாகாதெனத் தடுக்கபபடடும கட்டுப்படுத்தப் படடும இருக்கிறீரெனக குறிதத எதிரியாகிய உமககு இததால நான அறிவிததல கொடுககின்றேன. மேலும அதனை அல்லது அதன எபபாகததையாவது கொளவிலையாக, நனகொடையாக அலலது வேறுவகையாகப பெறறுககொளவதிலிருநது சகலரும தடுககபபடுகினறனா.

(ஒபபம்) : ————
பிசுககால்.

19——ம ஆணடு————மீ——ந உ

### 7 ம் இலக்க மாதிரிப்பத்திரம்.

கிராமாநதரக் கோடுகளுககான சிவில வழககுப பிரமாணங்களின 49 ம பிரமாணப்படி தடை அறிவித்தல்.

[1] எதிரியின பெயா.
[2] ஆடசியில வைத திருபபவரின பெயா
[3] பெயா கூறுக

[1] ————ககும
[2] ————ககும
————சாதகமாக
————உளள
————இல

————ம இலகக வழககிலே 19——ம ஆணடு————மீ————ந திகதி————ரூபாவுககு [1]————எதிராக அளிககபபடட தீர்வையை அவா அநுசரிதது நடககத தவறியதால குறிதத வழககில நிறைவேறறற கடடளை பிறப்பித்த கோடு பிறிதொரு கடடளை இடுமவரை குறிதத————இடமிருநது அவரின தறபோதைய ஆடசியில உளள நீா கீழககாணும ஆதனத்தை ஏறபதிலிருநது தடைபபடுததபபடடும கடடுபபடுததபபடடும இருககிறீா எனறு குறிதத எதிரியாகிய உமககு இததால் நான அறிவிததல் கொடுக கின்றேன அதாவது குறிதத எதிரியாகிய உமககுக குறிதத————இன உரித்துக் கேட்டல எதறகும அமைய உரித்தான [3]————எனனும ஆதனம, மேலும குறிதத————ஆகிய————நீா எவருககாவது அவவாதனத்தைக கையளிபபதி லிருநது பிறிதொரு கடடளை இனிமேல இடபபடுமவரை இததால தடைபபடுததியும கடடுபபடுத்தபபடடும இருக்கிறீர்

19——ம ஆணடு————மீ——ந உ

———— பிசுககால்

### 8 ம இலகக மாதிரிப்பத்திரம

கிராமாநதரக் கோடுகளுககான சிவில வழக்குப பிரமாணஙகளின் 49 ம பிரமாணப்படி தடை அறிவித்தல்

[1] எதிரியின பெயா.
[1] எதிரியின கடனாளியின பெயா.
[3] கடனாளியின பெயா
[4] குறிததுககாடடுக

[1] ————ககும
[2] ————ககும
————சாதகமாக
————உளள
————இல

————ம இலகக வழககிலே 19————ம ஆணடு————மாதம————ந் திகதி————ரூபாவுககு [1]———— ————கக எதிராக அளிககபபடட தீாவையை அவா அநுசரிதது நடககத தவறியதால————குறிதத வழககில் நிறை வேறறற கடடளை பிறபபிதத கோடு பிறிதொரு கடடளை இடுமவரை குறிதத [3]————இடமிருநது————உமககு இபபோது வருமதியெனக கூறபபடுகினற குறிதத ஓா கடனை, அதாவது————[4] ஏறபதிலிருநது தடைபபடுததபபடடும கடடுபபடுததப படடும இருககினறீா என குறிதத எதிரியாகிய உமககு இததால நான அறிவிததல கொடுககினறேன. மேலும், குறிதத ————ஆகிய நீா பிறிதொரு கடடளை இடபபடுமவரை குறிதத கடனை அலலது எபபகுதியையாவது எவருக்காவது கொடுபபதி லிருநது தடைபபடுததபபடடும கடடுபபடுததபபடடும இருககினறீா எனவும இததால நான அறிவிததல கொடுககினறேன

———— பிசுககால

19——ம ஆணடு———— மீ——ந உ.

குறிபபு —(1) பினவருவன நடுக்கடடலிலிருநது நீககப்படும :—

(1) ஓா அரசாஙக உததியோகததரின அலலது சேவையாளரின சமபளம
(2) தொழிலாளரினதும வீடடு வேலையாடகளினதும சமபளஙகள.

(2) நடுககடடல விஷயமாக கிராமாநதரக கோடடு நீதவானுடனேயே சகல கடிதப போககுவரத்தும செயதல **வேண்டும.**

### 9 ம் இலக்க மாதிரிப்பத்திரம்.

காணி விறபனவை உறுதிபபடுததும கடடளை.

————இல :

[1] இடம
[2] வழககாளியின பெயா
[3] எதிரியின பெயர்

[1]————உளள கிராமாநதரக் கோடடிலே
[2]————வழககாளி
[3]————எதிரி

மேறசொலலிய வழககின தீர்வையை நிறைவேறறுதலில இதன பினனால விபரிககபபடும ஆதனம, 19——ம ஆண்டு ————மாதம ———— ந திகதி ———— பிசுககாலால விறகபபடடிருககிறபடியாலும, குறிதத விறபனவைபபறறி அநத பிசுக்காலின அறிககைவநது சோநது முபபது நாடகள கழிநதுவிட்டபடியாலும, அவவாதன விறபனவை விலககியழிகக வேணடுமெனறு யாதும் விணணபபம செயயபபடாதபடியாலும (அலலது கூறபபடட தடைகள தளளப்பபடடபடியாலும) மேறகுறிதத விறபனவு அமைக எனறும அது இத்தால உறுதிபபடுததபபடுகினறதெனறும கடடளையிடபபடுகினறது. (குறிதத பிசுககால விறபனவு விலககி யழிககபபடவேணடுமெனறு, தடைசெயயபபடடபடியாலும அததடை விணணபபம ஏறறுககொளளபபடடபடியாலும மேறகுறிதத விறபனவு விலககியழிககபபடடிருககிறதெனறும கடடளையிடபபடுகிறது.

(கையொபபம) : ————
நீதவான பெயரும உததியோகமும.

19——ம ஆணடு————மீ——ந உ

### 10 ம் இலக்க மாதிரிப்பததிரம்.

கிராமாந்தரக் கோடடால விறபனவு உறுதியாக்கப்படடபின், பிசுக்கால் அறுதி உறுதி முடித்தல்

(சிவில் பிரமாணம்—61).

———— கிராமாநதரக கோடடிலிருநது 19——ம ஆணடு————மாதம——ந திகதி இடபபெறறு————மாகாண பிசுககாலுககு (அலலது சந்தாபபததுககமைவாக பிரதி பிசுககாலுககு) அனுபபி அதன பிரகாரம (நடுககடடல அதிகாரபபததிரததிலுளள கடடளைகளை இஙகே குறிபபிடுக) செயய வேணடுமெனறு பிறபபிககபபடட நடுககடடல அதிகாரபபததிரததின பலததாலும குறிதத மாகாணததின பிசுககால (அலலது பிரதி பிசுககால ஆகிய திரு————அவாகள. இதனகததுக கீழே விபரிககபபடடிருககும ஆதனததை நடுககடடுவிததுப பிடிதது எடுததுப போதிய அறிவிததலின பின, சொலலப படட அநதப பிசுககாலின (அலலது பிரதி பிசுககாலின) அதிகாரததின பிரகாரம————அவாகளால————ம ஆணடு————மாதம——ந திகதி————இல பிரசிதத ஏல விறபனைககு விட்டு அநத விறபனையில ஆககககூடிய கேளவிககாரனாகிய————கக————ரூபாவுககு விறறிருக்கிற படியாலும.

சொல்லப்பட்ட (கொள்வனவுகாரன்) மேற்குறித்த பிசுக்காலுக்கு (அல்லது பிரதி பிசுக்காலுக்கு) குறித்த கொள்வனவுப் பணம் முழுவதையும் முறையே கொடுத்து அதன் பயனாக சொல்லப்பட்ட ஆதனத்தில் ————க்கு உள்ள நயம் உரித்து சோந்தைகள் முழுவதுக்கும் உரியவராய் விட்ட படியாலும்,

குறித்த கோடு 19——ம் ஆண்டு————மாதம்———ந் திகதியைக்கொண்ட கட்டளைப் பிரகாரம் (இதன் பிரதி இத்துடன் அணைக்கப்பட்டிருக்கிறது) குறித்த விற்பனவை முறையே உறுதிப்படுத்தியிருக்கிறபடியாலும்

இத்தால் சகலருமறிக :

————மாகாணத்துப் பிசுக்காலாகிய குறித்த சொல்லப்பட்டவரால் (கொள்வனவுகாரனால்) மேலே கூறிய பிரகாரம் அவ்வாறு கொடுக்கப்பட்ட (அல்லது செல்லுமதியாக்கப்பட்ட) குறித்த————என்னும் தொகையின் பொருட்டு, அத்தொகையைப் பெற்றுக்கொண்டதை சொல்லப்பட்ட இத்தால் ஒப்புக்கொண்டு (எல்லை அளவு காட்டிக் காணியின் பெயர்)————கொண்டதாய் இத்துடன் அணைக்கப்பட்டுள்ள விளக்கப்படம் அல்லது படத்தில் விபரிக்கப் பட்டு (கொள்வனவுகாரனுக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஏதும் உரித்து உறுதி அல்லது அப்படி எதுவும் இல்லாவிட்டால் அப்பொழுது)————என்று அடையாளமிடப்பட்ட தாகிய காணி முழுவதையும் அதனைச் சேர்ந்த சகலவற்றையும் விற்றுச் சாட்டுதல் செய்தும் இத்தால் சொல்லப்பட்டவருக்கும் (கொள்வனவு காரன்) அவர் உரிமைக்காரரும், உரிமை தத்துவகாரரும் மரணசாதனத் தத்துவகாரரும் சாட்டுதற்காரரும் அதனை என்றென்றும் வைத்திருந்து ஆண்டனு பவிப்பார்கள்.

19——ம் ஆண்டு————மாதம்——ந் திகதி ஆகிய இன்று————இல் சொல்லப்பட்டவர் (பிசுக்கால்) இதனகத்துத் தன் கையொப்பத்தை யிட்டிருக்கிறார்.

அணைக்கப்பட்டவை.

————பிசுக்கால்

### 11 ம் இலக்க மாதிரிப்பத்திரம்.

### கடன் இறுக்கத் தீர்க்கப்பட்டவர் வசிக்கும் ஆதனத்தைக் கொள்வனவுகாரனுக்கு ஆட்சி கையளிக்கும் கட்டளை.

| | |
|---|---|
| 1 இடம். | 1————ல் உள்ள |
| 2 கோடு. | 2————கோட்டிலே |
| 3 வழக்காளியின் பெயர். | 3————வழக்காளி |
| 4 எதிரியின் பெயர். | 4————எதிரி. |
| | மாகாண பிசுக்காலுக்கு, |
| 5 காணியின் பெயர். (அல்லது அதன்விபரம்) 6 கொள்வனவுகாரனின் பெயர் 7 நீதவானின் பெய ரும் உத்தியோக பதவியும். | மேற்குறித்த வழக்கின் தீர்ப்பை நிறைவேற்றுதற்கு நடத்திய 5————இன் விற்பனையில் 6————என்பவர். கொள் வனவுகாரனாக இருப்பதாலும் குறித்த 5———— 6———— இன் ஆட்சியில் இருக்கிறபடியாலும் குறித்த 6————க்குக் காணியின் ஆட்சியை ஒப்படைக்குமாறும் தீர்ப்பால் கட்டுப்படுத்தப்பட்ட எவரும் ஆதனத்திலிருந்து வெளியேற மறுப்பின், அவரை அகற்றுமாறும் இத்தால் உமக்குக் கட்டளையிடப்படுகின்றது. |
| | 7————(கையொப்பம்). |

19 ம்————ஆண்டு————மீ——ந் உ.

மொழிபெயர்த்தவர்: முதலியார் குல. சபாநாதன்,
அரசினர் தலைமைத் தமிழ் மொழிபெயர்ப்பாளர்.

---

L. D.—B. 97/46

1947 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ந் திகதியைக்கொண்ட 9,775 ம் இலக்க விசேஷ "கெசெற்" பத்திரிகையிற் பிரசுரிக்கப்பெற்ற பிரகடனத்தால் திருத்தப்பெற்ற, 1945 ம் ஆண்டின் 12 ம் இலக்க கிராமாந்தரக் கோட்டுச் சட்டத்தின் 52 ம் பிரிவின்படி, தமக்கு வைக்கப்பட்ட தத்துவத்தின் பலத்தைக் கொண்டு, நீதிமந்திரியால் ஆக்கப்பட்ட பிரமாணங்கள்.

வி. சுப்பிரமணியம்,
நிரந்தரக் காரியதரிசிக்காக,
நீதிமந்திரி காரியாலயம்.

கொழும்பு, 1948 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 28 ந் உ.

## கிராமாந்தரக் கோடுகளுக்கான கிறிமினல் வழக்கு முறைகளைப்பற்றிய பிரமாணங்கள்.

### I.—விசாரணை நிகழ்ச்சி ஆரம்பம்.

1 (1) அடாத்துக்கள் சம்பந்தமாக, ஒரு கிராமாந்தரக் கோட்டுக்குச் செய்யப்படும் முறைப்பாடுகள்,—

(a) நீதவான் முன்னிலையில் வாய்மொழி வாக்குமூலம் அளித்தல் மூலமாகவேனும் ; அல்லது

(b) முறைப்பாட்டுக்காரன், தமது முறைப்பாட்டை எழுதிக் கையொப்பமும் திகதியுமிட்டு நீதவானிடம் கொடுத்தல் அல்லது அனுப்புதல் மூலமாக வேனும், செய்யப்படலாம்.

(2) வாய்மொழி வாக்குமூலம் அளிக்குமிடத்து, அதனை அளிக்கும்போதே நீதவான் அதனை எழுதிக்கொள்ளல் வேண்டும். முறைப்பாட்டுக்காரனின் வாக்குமூலம் எழுத்தில் கொடுக்கப்படுமிடத்து அல்லது அனுப்பப்படுமிடத்து, அது கிடைக்கப்பெற்ற திகதியை நீதவான் அதிற் குறிப்பிட்டு அச்சாதனத் தில் கையொப்பமிடுதல் மூலம் அல்லது தமது முதலெழுத்தொப்பம் இடுதல் மூலம் அதனை அத்தாட்சிப்படுத்துவர்.

(3) ஓர் அடாத்து தெரிவிக்கப்பட்டு, நீதவான் விசாரணை நிகழ்த்தத் தீர்மானித்தால் :—

(a) ஒரு எழுத்துமூலமான அறிக்கை, அது நீதவானால் எழுதப்பட்டதாயினும் அல்லது முறைப்பாட்டுக்காரனால் கொடுக்கப்பட்டதாயினும் அல்லது அனுப்பப்பட்டதாயினும் அது விசாரணைக் குறிப்பெடுக்கவேண்டிய வழக்குப் புத்தகத்தின் பாகமாகக் கோவைசெய்து வைக்கப்படவேண்டும் ; மேலும்

(b) அவ்வழக்குப் புத்தகத்துடன் பின்வரும் விவரங்களைக்கொண்ட ஒரு தாளினையும் அணைத்துவைத்தல் வேண்டும் :—

(i.) வழக்கின் இலக்கம் ———— ;
(ii.) வழக்குத் தொடர்ந்த திகதி ———— ;
(iii.) முறைப்பாட்டுக்காரரின் பெயர்களும் எதிரியின் பெயரும் அல்லது எதிரிகளின் பெயர்களும் ———— ;
(iv.) அடாத்து நடந்த திகதியும் இடமும் ———— ;
(v.) எதிரி அல்லது எதிரிகள் ஒவ்வொருவர்மீதும் குற்றஞ்சாட்டப்பட்ட அடாத்தின் பெயர் அல்லது விபரம் ———— ;
(vi.) அவ்வடாத்தினை தண்டனைக்குள்ளாக்குதற்கான சட்டத்தின் அல்லது சட்டத்தின் பிரிவின் அல்லது உபவிதி அல்லது ஒழுக்க விதியின் பெயர், இலக்கம் அல்லது விவரம் ————.

2. (1) முறைப்பாட்டுக்காரன் தமது சாட்சிகளின் பெயர்களை வாய்மொழிமூலமாகவேனும் எழுத்துமூலமாகவேனும் கொடுக்க வேண்டும். அத்தகைய சாட்சிகளின் பெயர்கள் வாய்மொழிமூலமாகக் கொடுக்கப்படின், நீதவான் அவர்களின் பெயர்களையும் விலாசங்களையும் எழுதிக்கொள்ள வேண்டும். எழுத்துமூலமான நாமாவலி கொடுக்கப்படின் அந்நாமாவலியில் நீதவான் முதலெழுத்தொப்பமும் திகதியுமிட்டு அதனைக் கோவைசெய்து வைத்துக் கொள்ளவேண்டும்.

(2) யாதேனுமொரு விசாரணை நிகழ்ச்சியில் சம்பந்தப்பட்ட எதிரி அல்லது எதிரிகள் ஒவ்வொருவரினதும் விஷயத்தில் அவருக்கெதிராகவுள்ள குற்றச்சாட்டிற்கு விடையிறுக்குமிடத்து (1) ம் பந்தியின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகும்.

3. (1) முறைப்பாடு செய்யும்போது கட்சியினரும் அவர்களுடைய சாட்சிகளும் சமுகமாயிருந்தால் அல்லது அவர்களைத் தாமதமின்றிச் சமுகமளிக்கச் செய்ய முடியுமாயின், நீதவான் வழக்கை விளங்கத் தொடங்கலாம்.

(2) எதிரி அல்லது முக்கிய சாட்சி சமுகமளியாதிருந்தால், அவ்வழக்கை விளங்குவதற்கு நீதவான் ஒரு திகதியைக் குறிப்பிட்டு, அத்திகதியில் சமுகமளிக்கும்படி அத்தகைய எதிரி ஒவ்வொருவருக்கும் சாட்சி ஒவ்வொருவருக்கும் சித்தாசி விடுப்பர்.

4. ஒருவர்மீது குற்றஞ்சாட்டப்பட்ட தெளிவான ஒவ்வொரு அடாத்தின் பேரிலும், வெவ்வேறு தனிப்பட்ட வழக்கு வகுக்கப்பட்டு, அத்தகைய வழக்கு ஒவ்வொன்றும் தனித்தனியாக விளக்கத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும். ஆயினும்—

(a) பன்னிரண்டு மாத காலத்துள் ஒருவர் ஒரேவித அடாத்து ஒன்றுக்கு மேற்பட்ட செய்திருப்பின் அத்தகைய குற்றங்கள் மூன்றினை ஒரே வழக்கில் விளக்கத்துக்கு எடுத்துக்கொள்ளலாம்.

(b) ஒரே தொடர்ச்சியான செயல்கள் ஒன்றோடொன்று தொடர்புபட்டு அத்தொடர்ச்சி சம்பந்தமாக ஒருவரே ஒன்றுக்கு மேற்பட்ட அடாத்துக்களைச் செய்தால், அத்தகைய அடாத்துக்கள் யாவும் ஒரு வழக்கில் விளக்கத்துக்கு எடுத்துக்கொள்ளலாம்; மேலும்

(c) ஒருவருக்கு மேற்பட்ட தொகையினர் ஒரே அடாத்தைச் செய்ததாக ஒருமித்துக் குற்றஞ்சாட்டப்படுமிடத்து, அவர்கள் யாவரையும் ஒருங்கே அதே வழக்கில் விளங்கலாம்.

5. முறைப்பாட்டுக்காரனால் அல்லது எதிரியால் போதிய நியாயம் கூறப்படுமிடத்து, நீதவான் அவ்வழக்கு விசாரணையைத் தவணை போடலாம். அங்ஙனஞ் செய்யுமிடத்து வழக்கு விசாரணைத் திகதி சித்தாசிகள் சேர்க்கப்படுதற்கு விதிக்கப்பட்டவாறே அறிவித்தல் மூலமாகவேனும், வாக்கு மூலமாகவேனும் கட்சியினருக்கு அறிவித்தல் கொடுக்கப்படும். விசாரணைத் திகதி தவணை போடப்பட்டால் தவணை போட்டதற்குரிய நியாயத்தை நீதவான் வழக்குப் பத்திரத்தில் எழுதிவைப்பார்.

## II.—கைது செய்தல்.

6. ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் அல்லது பொலிஸின் கடமைகளைச் செய்ய மாகாண அதிபரால் நியமிக்கப்பட்ட ஒரு தலைமைக்காரன், இத்துடனுள்ள II ம் அட்டவணையில் கூறப்பட்ட அடாத்துக்களுள் எதையாவது தமது சமூகத்தில் செய்யும் ஒருவரை விருந்தில்லாமல் கைதுசெய்யலாம்.

## III.—கிராமாந்தரக் கோட்டுக் கட்டளைகள்

7. ஒரு கிராமாந்தரக் கோட்டின் கோட்டுக் கட்டளை ஒவ்வொன்றும் சட்டத்தின் 20 ம் பிரிவின்படி, அக்கோட்டின் வழக்கு விசாரணை நிகழ்ச்சி எந்தப் பாஷையில் நடைபெறுகிறதோ அப்பாஷையிலே, இரட்டைப் பிரதியில் விடுக்கப்படவேண்டும்.

8. (1) ஒரு எதிரிக்கான சித்தாசி ஒவ்வொன்றும் I ம் அட்டவணையிலுள்ள 1 ம் இலக்க மாதிரிப் பத்திரத்தில் இருக்கவேண்டும். ஒரு சாட்சிக்கான சித்தாசி ஒவ்வொன்றும் அவ்வட்டவணையிலுள்ள 2 ம் இலக்க மாதிரிப் பத்திரத்தில் இருக்கவேண்டும்.

(2) சட்டத்தின்படியுள்ள யாதேனும் வழக்கு விசாரணை நிகழ்ச்சியின் பொருட்டு யாதேனும் சாதனத்தை அல்லது வேறு பொருளைக் கொண்டு வந்து காண்பித்தல் தேவையானது அல்லது விரும்பத்தக்கது என நீதவான் கருதுமிடத்து, அத்தகைய சாதனம் அல்லது பொருள் எவர் வசம் அல்லது எவருடைய அதிகாரத்தில் இருக்கின்றதாக நம்பப்படுகிறதோ அவர் சித்தாசியிற் குறிப்பிட்ட நேரத்திலும் இடத்திலும் கொண்டுவந்து காட்டவேண்டுமென, 1 ம் அட்டவணையின் 2 (ii.) ம் இலக்க மாதிரிப் பத்திரத்தில் நீதவான் சித்தாசி விடுப்பார்.

(3) ஒரு சாதனத்தை அல்லது பொருளைக் காண்பிக்கும்படி மட்டும் இவ்விதியின்படி கேட்கப்படும் ஒருவர் தாமாகக் கொண்டுவந்து காட்டாமல் அச்சாதனத்தை அல்லது பொருளைக் கொண்டுவந்து காட்டுவித்தற்கு ஒழுங்கு செய்வாராயின், அவர் அக்கட்டளையின்படி ஒழுகியவராகக் கருதப்படுவர்.

(4) ஒவ்வொரு சித்தாசியும் நீதவானால் அல்லது நீதவானால் முறையே அதிகாரம் பெற்ற ஒரு கிளார்க்கரால் கையொப்பமிடப்படவேண்டும்.

9. (1) சித்தாசி பொதுவாக கிராமத் தலைமைக்காரனுக்கே அனுப்பப்படும். அவர் அதன் இரட்டைப் பிரதியை அதிற் குறிப்பிட்ட ஆளிடம் ஒப்படைத்தல் மூலம் அல்லது கொடுத்தல் மூலம் தாமாகவே சேர்ப்பித்து, அங்ஙனம் சேர்ப்பித்ததைப்பற்றி மூலப்பிரதியில் குறிப்பிட்டு நீதவானுக்கு அறிவிக்கவேண்டும்.

(2) சித்தாசி சேர்ப்பிக்கப்படவேண்டிய ஆளைப் பிரயத்தனமெடுத்தும் கண்டுபிடிக்க முடியவில்லையானால், கோட்டார் அங்ஙனம் கட்டளையிட்டால், அந்த ஆளினுடைய குடும்பத்திலுள்ள வயதுவந்தவர் ஒருவரிடம் அந்தச் சித்தாசியை விடுதல் மூலம் அல்லது அந்த ஆள் சாதாரணமாக வசிக்கும் வீட்டில் அல்லது வீட்டுத் தோட்டத்தில் நன்கு புலப்படக்கூடிய ஓரிடத்தில் அதனை ஒட்டுதல் மூலம், அந்தச் சித்தாசியைச் சேர்ப்பிக்கலாம். அத்தகைய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அங்ஙனம் சேர்ப்பிக்கப்பட்ட சித்தாசி முறையே சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படும்.

10. சித்தாசி முறையாகச் சேர்ப்பிக்கப்பட்டபின்னர், எதிரியாவது சாட்சியாவது, அவர் கோட்டில் சமூகமளிக்க வேண்டுமெனக் குறிப்பிட்ட திகதியில், அல்லது அவர் வந்து தெரிபட வேண்டுமென நீதவானால் எச்சரிக்கை செய்து குறிப்பிட்ட திகதியில் போதிய காரணமின்றிக் கோட்டில் சமூகமளிக்க மறுப்பாரானால் அல்லது அசட்டை செய்வாரானால் I ம் அட்டவணையிலுள்ள 3 ம் இலக்க மாதிரிப் பத்திரத்தில் தமது கையொப்பமிட்ட ஒரு விருந்தை நீதவான் விடுத்து எதிரியை அல்லது சாட்சியைக் கைதுசெய்து கோட்டுக்குக் கொண்டுவரும்படி செய்வர்.

## IV.—வந்து தெரிபடாதவிடத்துள்ள விசாரணை நிகழ்ச்சி.

11. சித்தாசி திரும்பி வரவேண்டிய திகதியன்று அல்லது முறைப்பாட்டை விசாரணைக்கெடுக்க நியமித்த திகதியன்று, முறைப்பாட்டுக்காரன் வந்து தெரிபடாதிருந்து அவன் வந்து தெரிபடாமைக்குப் போதிய காரணம் காட்டாதிருந்தால், முறைப்பாடு தள்ளிவிடப்படும்.

ஆயினும் அந்த முறைப்பாட்டுக்காரன், தனக்கேற்பட்ட தற்செயல் அபாயத்தால் அல்லது துரதிஷ்டத்தால் வந்து தெரிபடுவது தடைப்படவேண்டியதாயிற்றென்றும், தான் அலட்சியம் செய்ததனால் வந்து தெரிபடாது விடவில்லையென்றும், நீதவான் திருப்திப்படக்கூடியதாக (நியாயமான காலவெல்லையுள்) காரணங்காட்டினால், அவ்வழக்கை மறுபடியும் ஆரம்பிக்க நீதவான் உத்தரவளிக்கலாம். முறைப்பாடு தள்ளப்பட்டது என்ற கட்டளை அழிக்கப்பட்டு, வழக்கு விளக்கத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## V.—வந்து தெரிபட்டவிடத்து விசாரணை நிகழ்ச்சி—விளக்கம்.

12. (1) ஒவ்வொரு நாளும் விசாரணை நிகழ்ச்சியை ஆரம்பிக்கும்பொழுது சமூகமளித்த கட்சியினரின் பெயர்கள் குறிக்கப்படவேண்டும்.

(2) சட்டத்தின் 23 ம் பிரிவின் ஏற்பாடுகளின்படி ஒரு வழக்கு இணங்கப்பட்டால், இணக்கத்துக்குரிய நிபந்தனைகள் பதியப்பட்டு, அப்பதிவு கட்சியினருக்கு வாசித்து விளங்கப்படுத்திய பின்னர், அதற்கு அவர்கள் கையொப்பமிடவேண்டும்.

13. (1) எதிரி வந்து தெரிபடுமிடத்து, அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்ட அடாத்தின் இயல்பினை நீதவான் அவருக்கு வாசித்து விளங்கப்படுத்தி, அவரைக் குற்றவாளியெனத் தீர்ப்பளித்தற்கெதிராக ஏதாவது நியாயமிருக்கின்றதாவென்று கேட்பர். இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவென்பதை வழக்குப் புத்தகத்தில் பதிந்து கொள்ளவேண்டும்.

(2) 1 ம் பந்தியிற் குறிப்பிட்டவாறு கேட்டவிடத்து, எதிரி குற்றவாளியென ஒப்புக்கொண்டு விடையிறுத்தால் அல்லது தன்மீது குற்றஞ் சுமத்தப்பட்ட அடாத்தின் பேரில் குற்றவாளியென நிபந்தனையற்று ஏற்றுக்கொள்ளத் தக்கதாக வாக்குமூலம் கொடுத்தால், வாக்குமூலம் சொல்லிய வார்த்தைகளையே ஏறக்குறைய நீதவான் எழுதி, குற்றவாளியென உடனே தீர்ப்பெழுதி அவருக்குத் தண்டனை விதித்து, அத்தண்டனையை வழக்குப் புத்தகத்தில் பதிந்து கொள்ளவேண்டும்.

(3) எதிரி குற்றவாளியல்லவென்று கூறினால், அவருடைய வாக்குமூலத்தையும் சாட்சிகளிருப்பின் அவருடைய சாட்சிகளின் பெயர்களையும் நீதவான் வழக்குப் புத்தகத்திற் பதிந்துகொண்டு, விளக்கத்தைத் தவணை போட்டு, தேவையான சாட்சிகளுக்கு சித்தாசி விடுப்பர்.

14. (1) ஒரு வழக்கை விளங்கும்பொழுது கிரியா முறை பின்வருமாறு இருத்தல் வேண்டும்:—

(a) சத்தியம் செய்து அல்லது உறுதிப்படுத்தி முறைப்பாட்டுக்காரனின் சாட்சியம்
(b) சத்தியம் செய்து அல்லது உறுதிப்படுத்தி முறைப்பாட்டுக்காரனின் சாட்சிகளின் சாட்சியம்
(c) சத்தியம் செய்து அல்லது உறுதிப்படுத்தி எதிரியின் சாட்சியம்
(d) சத்தியம் செய்து அல்லது உறுதிப்படுத்தி எதிரியின் சாட்சிகளின் சாட்சியம்.
(e) தீர்ப்பு
(f) தீர்ப்பும் தண்டனையும்

(2) ஒவ்வொரு கட்சியினர் தந்தம் எதிர்க் கட்சியினரையும் சாட்சிகளையும் குறுக்கு விசாரணை செய்யலாம். மேலும் தமது சொந்தச் சாட்சிகளையும் விசாரணை செய்து மீளவும் விசாரணை செய்யலாம்.

(3) நீதவான் தேவையெனக் கருதினால், இன்னும் விசாரணை செய்வதற்காக அல்லது குறுக்கு விசாரணை செய்வதற்காக முறைப்பாட்டுக்காரனையாவது அவருடைய சாட்சிகளுள் எவரையாவது மீளவும் கூப்பிடலாம், அல்லது ஒருவருடைய சாட்சியம் முக்கியமானதென நீதவான் கருதும் வேறெவரையாவது சாட்சியாக அவர் கூப்பிடலாம்.

(4) எதிரியினுடைய பிரதிவாதத்தைக் கூறும்படி நீதவான் அவரைக் கூப்பிட்டவிடத்து, எதிரி தன் பொருட்டுச் சாட்சியம் கொடுக்க அவருக்குள்ள உரித்தைப்பற்றி நீதவான் கூறுவர். வழக்காளியின் சார்பாகக் கொடுக்கப்பட்ட சாட்சியத்தில் எதிரிக்கெதிராகவுள்ள முக்கிய விஷயங்களை அவ்வெதிரி விளங்கப்படுத்துவதற்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கும் பொருட்டு, அவற்றை நீதவான் எதிரிக்கு எடுத்துக் காட்டுவர்.

(5) எதிரி தாமே சாட்சியம் கொடுக்க விரும்பினால் அல்லது தமது பிரதிவாதத்துக்குச் சாட்சிகளைக் கூப்பிட விரும்பினால், இன்னும் விசாரணை செய்வதற்கு அல்லது குறுக்கு விசாரணை செய்வதற்கு அவருடைய சாட்சிகளை நீதவான் மீளவும் கூப்பிடுவார்.

(6) ஒரு எதிரிக்கு எதிராகவுள்ள சாட்சியத்தில் காணப்படும் சந்தர்ப்பங்களை அவ்வெதிரி விளக்குதற் பொருட்டு, அதனை அவர் கவனிக்குமாறு நீதவான் கேட்டு, வழக்கு விசாரணை நிகழ்ச்சியின்போது எந்தச் சமயத்திலாவது தாம் தேவையெனக் கருதும் அத்தகைய கேள்விகளை முற்கூறிய நோக்கத்துக்காகக் கேட்கலாம். ஆனால் எதிரி எவ்வித வாக்குமூலம் கொடுக்கவோ அல்லது அத்தகைய கேள்வி எதற்கும் விடையளிக்கவோ வற்புறுத்தப்படமாட்டார் என்பதை நீதவான் முதலில் எதிரிக்கு அறிவிக்கவேண்டும். ஆயினும், அங்ஙனம் கூறியவிடத்து அல்லது கேட்டவிடத்து எதிரி கொடுத்த வாக்குமூலத்தை அல்லது விடையை நீதவான் எழுதிக் கொள்ளவேண்டும்.

15. கட்சியினரையும் அவர்களுடைய சாட்சிகளையும் அல்லது நீதவானாவது கட்சியினராவது தேவைப்பட்டவாறு அவர்களுள் எவர்களையேனும் விளங்கியபின், எதிரி குற்றவாளி அல்லது சுத்தவாளியென நீதவான் தமது தீர்ப்பை வழக்குப்புத்தகத்தில் பதிந்து கோட்டிலே பகிரங்கமாகக் கூறுதல் வேண்டும். எதிரி சுத்தவாளியென நீதவான் கண்டால், அவர் எதிரியை உடனே சுத்தவாளியாக்கி விடுதலை செய்வார்.

16. வழக்கு நடைபெறும் எச்சமயத்திலும் நீதவான் எதிரியை விடுதலை செய்யலாம். ஆனால் அவர் அங்ஙனம் செய்தற்குரிய நியாயங்களை வழக்குப் புத்தகத்தில் பதிந்து வைத்தல் வேண்டும்.

17. (a) எதிரி குற்றவாளியெனக் காணப்பட்டதற்கு அல்லது விடுதலை செய்யப்பட்டதற்கு ஏதுவான அடாத்தினையும்,
(b) நீதவானுடைய தீர்ப்புக்குரிய நியாயங்களையும் தீர்ப்பில் குறிப்பிடவேண்டும்.

18. எதிரி குற்றவாளியெனக் காணப்பட்டால், நீதவான் அவருக்குத் தண்டனையை விதிப்பார்.

19. (1) ஒரே வழக்கில் ஒரு எதிரி ஒன்றுக்கு மேற்பட்ட அடாத்துக்களின் பேரால் குற்றவாளியெனக் காணப்பட்டால், அத்தகைய அடாத்துக்களுக்குரிய தண்டனைகள் யாவும் ஒருங்கே சேர்க்கப்படும்;

ஆயினும் நீதவான் விதிக்கக்கூடிய மறியற்காலவெல்லை முழுவதற்கும் அல்லது ஆக்கக்கூடிய தண்டப் பணத்துக்கும் மேற்பட தண்டனை விதிக்கக் கூடாது:

(2) எதிரியை ஒரு குறித்த காலத்துக்கு மறியல் இருக்கும்படி நீதவான் தண்டனை விதித்தால் 1 ம் அட்டவணையிலுள்ள 4 ம் இலக்க மாதிரிப் பத்திரத்தில் ஒப்படைப்பு விருந்தினை அவர் பிறப்பிப்பார்.

(3) தண்டப்பணம் இறுக்கத் தவறியதால் விதிக்கப்பட்ட மறியல், அப்பணம் கட்டியதும் அல்லது சட்டமுறைப்படி அறவிடப்பட்டதும், முடிவடையும்.

(4) தண்டப்பணம் இறுக்கத் தவறியதால் விதிக்கப்பட்ட மறியற்காலம் முடிவடையமுன்னர், அத்தண்டப்பணத்தின் ஒரு பாகம் கொடுக்கப்பட்டால் அல்லது அறவிடப்பட்டால் கொடுபடாது எஞ்சியிருக்கும் தண்டப்பணத்தின் விகிதசமானத்திற்குக் குறையாமல் அது வரையில் மறியல் இருந்திருப்பின் அத்துடன் மறியல் முடிவடையும்.

(5) தண்டப் பணத்தின் எப்பங்காவது கோட்டில் கட்டப்பட்டால், எஞ்சிய பங்குப் பணத்தைக் கட்டத்தவறியதற்காக எதிரியை மறியலிலிருக்க ஒப்படைக்கும் விருந்தில் கட்டப்பட்ட பணத்தின் தொகையும் அங்ஙனம் அத்தொகை கட்டப்பட்டதென்பதுவும் புறக்குறிப்பாக எழுதப்பட்டு நீதவானால் கையொப்பமிடப்படும்.

## VI.—அடாத்துகளுடன் சம்பந்தப்பட்ட ஆதனத்தைக் கையளித்தல்

20. ஒரு வழக்கில் கொண்டுவந்துகாட்டிய பொருள் கால் நடைகளாகவிருப்பின் அல்லது விரைவாக இயல்பாக அழுகிப்போகும் தன்மையுடையதாயிருப்பின், அதனைப் பெறுதற்கு உரித்துடையவரென நீதவான் கருதும் சொந்தக்காரனிடம், அதன் பாதுகாப்புக்கேற்ற நிபந்தனைகளின்மேல் அல்லது தாம் தகுதியெனக்கருதும் வேறு முறையில், அதனை ஒப்படைத்துவிடும்படி நீதவான் எப்பொழுதேனும் கட்டளையிடுவார். அப்பொருளைப் பெறுதற்கு உரித்துடைய சொந்தக்காரன் யாரெனத் திருத்திகரமாகக் கண்டுகொள்ள முடியாதெனில், நீதவான் அதனை விற்கும்படி கட்டளையிட்டு, அதனால் பெற்ற பணத்தைக் கோட்டில் கட்டும்படி கட்டளையிடலாம்.

21. (1) விளக்கம் முடிந்ததும், யாதேனும் ஒரு சாதனம் அல்லது வேறு பொருள் சம்பந்தமாக ஓர் அடாத்துச் செய்யப்பட்டதாகக் கருதப்பட்டு அது கோட்டில் கொண்டுவந்து காட்டப்பட்டிருந்தால், நீதவான் அதனைக் கையளிப்பதற்குத் தகுதியெனக் கருதும் கட்டளையை இடுவார்.

(2) அப்பீல் செய்யப்படும் ஒரு வழக்கில் இந்தப் பிரமாணத்தின்படி ஒரு கட்டளை இடப்பட்டால், அத்தகைய கட்டளையை (அப்பொருள் கால் நடைகளாக அல்லது விரைவாக இயல்பாக அழுகிப்போகும் தன்மையுடையதாக இருந்தால் அன்றி) அங்ஙனம் அப்பீல் செய்வதற்குரிய காலம் கழியுமவரை அல்லது அத்தகைய அப்பீல் அக்கால வெல்லையுள் கொடுக்கப்பட்டால், அப்பீல் முடியும் வரை, நிறைவேற்றக்கூடாது.

22. ஒரு வழக்கில் கொண்டுவந்து காட்டப்பட்ட பொருளுக்கு உரிமையுடைய சொந்தக்காரன் யார் என அறிய முடியாதிருந்தால், வழக்கு முடிந்து ஆறுமாத காலம் கழிந்தபின் அது அரசாங்கத்தைச் சார்ந்ததாகும். அதனை விற்று விற்பனையால் பெற்ற பணத்தை அரசிறையிற் கட்டவேண்டும். 20 ம் பிரமாணப்படி விற்பனையால் பெற்று கோட்டில் கட்டிய பணமும் அதேவிதமாக அரசிறையிற் கட்டப்படவேண்டும்.

## VII.—தவணைபோடுதலும் பின்போடுதலும்.

23. ஒரு சாட்சி வராத காரணத்தால் அல்லது வேறு ஏதும் தகுந்த நியாயத்தால், ஒரு விளக்கத்தைத் தவணைபோட அல்லது பின்போட வேண்டிய தேவை ஏற்பட்டால் அல்லது அங்ஙனம் செய்தல் புத்தியானது எனக்காணப்பட்டால், நீதவான் காலத்திற்குக்காலம் நியாயமானதெனக் கருதும் ஒரு திகதிக்கு வழக்கைத் தவணைபோட அல்லது பின்போடக் கட்டளையிடலாம்.

24. கட்சியினர் வந்து தெரிபட்ட பின்னர், அடாத்து நிகழ்ந்த இடத்தை அல்லது அடாத்து நிகழ்ந்ததோடு சம்பந்தப்பட்ட யாதேனும் ஆதனத்தை நீதவான் சென்று பரிசோதிக்கும் வரை, தேவையெனக் கருதின், அவ்வழக்கு விளக்கத்தை எப்பொழுதாவது பின்போடலாம். அங்ஙனம் பரிசோதிப்பதற்குரிய நேரமும் இடமும் கட்சியினருக்கு நீதவானால் அறிவிக்கப்படும். கட்சியினர் பரிசோதனையின்போது சமுகமளிக்க உரித்துண்டு என்பது அந்த அறிவித்தலில் குறிப்பிடப்படும்.

25. சுகவீனங்காரணமாக அல்லது வேறு காரணமாக நீதவான் வராதிருந்தால், குறித்த கோட்டின் மீது அப்பீல் நியாயாதிக்கமுள்ள டிஸ்திறிக் கோட்டு நீதவானால் அதற்கென அதிகாரம் அளிக்கப்பெற்ற கோட்டு லிகிதர், கிராமாந்தரக் கோட்டு நீதவான் வராத காலவெல்லையுள் விளக்கத்துக்குக் குறிக்கப்பட்ட வழக்குகள் யாவற்றையும் கூப்பிட்டு வேறெந்தத் திகதிக்காவது தவணை போடுதல் தகுதியாகும்.

## VIII.—பிணை.

26. விருந்தின்றி ஒருவர் கைது செய்யப்பட்டால் 36 (2) ம், (4) ம் பிரிவின்படி கொடுக்கப்படவேண்டிய பிணையுணையுறுதி I ம் அட்டவணையிலுள்ள 5 ம் இலக்க மாதிரிப் பத்திரத்தின் பொருளமையப் பெற்றதாயிருத்தல் வேண்டும்.

27. (a) ஒரு எதிரி அல்லது சாட்சி பிடிவிருந்தின் பேரால் நீதவான் முன்பு கொண்டுவரப்பட்டால் அல்லது (b) எதிரி மீது குற்றஞ்சாட்டப்படும் அடாத்தைப்பற்றிய விபரம் மஜிஸ்ரேட் முன் சமர்ப்பிக்கப்படவேண்டிய பாரதூரமான இயல்பினதானால்,—

(i.) குறித்த ஒரு திகதியில் கோட்டுக்கு வந்து தெரியும்படி; அல்லது

(ii) மஜிஸ்ரேட் முன் விஷயம் சமர்ப்பிக்கப்படவேண்டிய, அப்பிணைப் பத்திரத்தில் குறித்த காலவெல்லையுள் மஜிஸ்ரேட் முன்வந்து தெரியும்படி, 1 ம் அட்டவணையிலுள்ள 6 ம் இலக்க மாதிரிப் பத்திரத்தின் பொருளமைந்த ஒரு பிணையுறுதியை, நீதவானுடைய விருப்பப்படி பிணையாட்களுடன் அல்லது அவர்களின்றி, முடிக்கும்படி நீதவான் அவரைக் கேட்கலாம்.

அத்தகைய பிணையுறுதியின் தொகை நூறு ரூபாவுக்கு மேற்படக்கூடாது.

28. கோட்டில் குற்றஞ்சாட்டப்பட்டவர் 16 வயதுக்குட்பட்டவராயின் அவரின் பெற்றார் அல்லது மேற்பார்வையாளர் அல்லது வயதுவந்த கிட்டிய உரித்தாளர் சட்டத்தின் 26 (3) (b) ம் பிரிவின்படி முடிக்கவேண்டிய பிணையுறுதி 1 ம் அட்டவணையிலுள்ள 7 ம் இலக்க மாதிரிப் பத்திரத்தின் பொருளமையப்பெற்றதாயிருக்கதல் வேண்டும்.

29. சட்டத்தின்படி முடிக்கப்பட்ட பிணையுறுதி பறிமுதலாக்கப்பட்டதெனத் தீர்ப்பளிக்கப்பட்டு அதன்படியுள்ள தண்டப்பணம் இறுக்கப்படாதிருந்தால், தண்டப்பணம் அறவிடுதற்காகப் பிசுக்காலுக்கு சட்டத்தின் 37 (2) ம் பிரிவின்படி அனுப்பப்படும் விருந்து I ம் அட்டவணையிலுள்ள 8 ம் இலக்க மாதிரிப் பத்திரத்தின் பொருளமையப்பெற்றதாயிருத்தல் வேண்டும்.

30. விருந்து கிடைத்ததும், பிசுக்கால் அல்லது வேறு உத்தியோகத்தர், கிராமாந்தரக் கோட்டுகளில் சிவில் வழக்குகளில் குற்றவாளியாக்கப்பட்ட கட்சிமீது ஆதனவிருந்து எடுப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட ஒழுங்கின்படியே, அக்கட்சியின் அசைவற்ற, அசைவுள்ள ஆதனங்களை நடுக்கட்டி விற்று தண்டப் பணத்தையறவிட ஒழுங்குசெய்வார். கிராமாந்தரக் கோட்டுகளுக்கான சிவில் வழக்குப் பிரமாணங்களின் ஏற்பாடுகள், அவற்றுக்கு அவ்வவ்விஷயங்களில் தேவையான மாற்றங்களோடு, ஏற்புடையனவாகும்.

### IX.—அப்பீல்.

31. (1) ஒரு கோட்டின் தீர்ப்புக்கு அல்லது முடிவான கட்டளைக்கெதிராகச் செய்யப்படும் அப்பீல் ஒவ்வொன்றும் சட்டத்தின் 41 (1) ம் பிரிவிற் குறிப்பிட்ட கால வெல்லையுள் அப்பீல் செய்பவர் அல்லது செய்பவாகள் காரியத்துக்கேறப, கையொப்பமிட்ட எழுத்துமூலமான விண்ணப்பமூலம் நீதவானுக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

அத்தகைய விண்ணப்பத்தில :—

(i.) அப்பீல் எந்தத் தீர்ப்பு அல்லது முடிவான கட்டளைக்கெதிராகச் செய்யப்படுகின்றதோ அதனை அளித்த கோட்டின் பெயர் ;

(ii.) வழக்கின் இலக்கம் ;

(iii.) வழக்கில் சம்பந்தப்பட்ட கட்சிகளின் பெயர்களும் அப்பீல் கட்சியின் பெயரும் ;

(iv.) அப்பீலுக்குரிய நியாயங்கள் ;

(v.) கேட்கும் நஷ்ட ஈட்டின் தன்மை ;

என்னுமிவை காட்டப்பட வேண்டும்

(2) சட்டத்தின் 47 ம் பிரிவின்படி ஒட்டப்பட வேண்டிய முத்திரை முறையே ஒட்டப்படாத விண்ணப்பம் விண்ணப்பக்காரனுக்குத் திருப்பி யனுப்பப்படும்.

(3) அப்பீல் விண்ணப்பம் நீதவானுக்குச் சமர்ப்பிக்கப்பட்டதும் அவர் அதிலுள்ள முத்திரையை அழித்து, அவ்வழக்குப் புத்தகத்துடன் டிஸ்திறிக் நீதவானுக்கு அவ்விண்ணப்பத்தை அனுப்பிவைப்பார்.

(4) விண்ணப்பத்தை யனுப்பும்பொழுது, அது கிடைக்கப்பெற்ற திகதியை நீதவான் குறிப்பிட்டு அத்தாட்சிப்படுத்தி அனுப்புவார்.

32. ஒரு கோட்டின் முடிவான கட்டளைக்கு அல்லது தீர்ப்புக்கு எதிராகச் சட்டத்தின் 41 (1) ம் பிரிவின்படி அப்பீல் கேட்கப்பட்டால், அப்பீல் கேட்கும் கட்சி சித்தாசி சோப்பிக்கப்படுதற்கு விதிக்கப்பட்டவாறு சோப்பிக்கப்பட்ட எழுத்து மூலமான நொத்தீசில் நீதவானால் குறிக்கப்படும் திகதியன்று கோட்டில் சமுகமளிக்கவும் அத்தகைய அப்பீலில் செய்யப்படும் கட்டளைப்படி ஒழுகவும் இணங்கி, நீதவான் கட்டளையிட்டவாறு பிணைகளுடன் அல்லது பிணைகளின்றி 1 ம் அட்டவணையிலுள்ள 6 ம் மாதிரிப் பத்திரத்தின் பொருளமையப் பெற்ற பிணையுறுதியை முடித்துக்கொண்டாலன்றி அத்தகைய அப்பீலின்பேரால் முன்னரிட்ட முடிவான கட்டளை அல்லது தீர்ப்பு நிறைவேறுவதினின்றும் பின் போடப்படக்கூடாது. அத்தகைய பிணையுறுதியில் குறிக்கப்படும் தொகை நூறு ரூபாவுக்கு மேற்படக்கூடாது. அப்பீலின்பேரால் கட்டளை இடப்பட்ட பின்னர், அப்பீல் செய்யும் கட்சியின்மீது விதிக்கப்பட்ட தண்டனையை நிறைவேற்றும்பொருட்டு அவரைச் சமுகமளிக்கும்படி கட்டாயப்படுத்தி ஒரு விருந்தை அனுப்புவதற்கு நீதவானுக்குச் சட்டமுறைப்படி அதிகாரமுண்டு.

33. தண்டப்பணம் இறுக்கத்தவறியதால் அல்லது மறியல் தண்டனை விதிக்கப்பட்டால், மறியலுக்கு அனுப்பப்படவேண்டிய ஒருவர் அப்பீல் விண்ணப்பம் செய்தால், அவர் தண்டப்பணம் இறுத்தற்காக அல்லது தண்டனை அநுபவித்தற்காக கோட்டில் சமுகமளிப்பதற்குப் பிணை கொடுப்பதன் பொருட்டு நீதவான் முன்பு கொண்டுவருவதற்கு, மறியற்சாலை சுப்பிரின்ரெண்டன் அவரைப் பிசுக்காலிடம் ஒப்படைப்பர்.

### X.—வழக்குப் புத்தகத்தின் அல்லது வழக்கு விசாரணை நிகழ்ச்சிப் பொழிப்பின் பிரதி.

34. யாதேனுமொரு வழக்கில் கொடுக்கப்பட்ட கட்டளையால் அல்லது தீர்ப்பால் பாதிக்கப்படுமொருவர் விண்ணப்பித்தவிடத்து, 120 சொற்கள் கொண்ட ஒவ்வொரு பக்கத்துக்கும் பன்னிரண்டு சதவீதம் பணம் பெற்றுக்கொண்டு அத்தகைய வழக்குப் புத்தகத்தின் அல்லது வழக்கு விசாரணை நிகழ்ச்சிப் பொழிப்பின் பிரதியொன்றை அல்லது அத்தகைய வழக்குப் புத்தகத்தின் அல்லது வழக்கு விசாரணை நிகழ்ச்சிப் பொழிப்பின் எப்பகுதியினதும் பிரதியொன்றை நீதவான் அவருக்குக் கொடுத்தல் வேண்டும். ஆயினும் நீதவான் தமது கருத்தின்படி, அத்தகைய பிரதி யாதேனும் நியாயத்தால் அவருக்குப் பணமின்றிக் கொடுக்கவேண்டுமென எண்ணினால், அங்ஙனம் பணம் கொடுப்பதை நீக்கிவிடலாம்.

### XI.—இடாப்புகள்.

35. ஒவ்வொரு கோட்டிலும் தண்டப்பண இடாப்பு எனப்படும் ஒரு புத்தகம் 1 ம் அட்டவணையிலுள்ள 9 ம் இலக்கப் பத்திரத்தின் பொருளமையப் பெற்ற வித்த்தில் வைத்திருக்கப்படவேண்டும். தண்டம் விதிக்கும்பொழுது, நீதவான் தாம் விதிக்கும் தண்டத்தின் விவரங்களை (அந்த இடாப்பில்) பதிந்து கொள்ள வேண்டும். வழக்குகள் சம்பந்தமாக கொண்டுவந்த பணம், வேறு பொருட்கள், கோட்டின் கட்டளைப்படி விற்றுப் பெற்ற பணம் என்பவற்றைப் பற்றிய விவரங்களை நாளதோறும் வெவ்வேறு புத்தகங்களில் நீதவான் எழுதிவைக்க வேண்டும்.

### XII.—நானாவிதம்.

36. கோட்டினால் அறவிடப்படும் சகல தண்ட, குற்ற, பறிமுதற் பணங்களும் வேறு வகையான பணங்களும் கிட்டடியிலுள்ள கச்சேரியில் நாள்தோறும் கட்டப்படவேண்டும் அல்லது மணி ஓடர் மூலம் மாகாண அதிபருக்கு அனுப்பப்படவேண்டும்.

37. ஒவ்வொரு கால் வருட முடிவிலும், நீதவான் அக்கோட்டின் மீது அப்பீல் நியாயாதிக்க அதிகாரமுள்ள டிஸ்திறிக் நீதவானுக்கு பின்வருபவற்றை இரட்டைப் பிரதிகளில் அனுப்பிவைக்க வேண்டும் —

(a) நீதவானின் அக்கால் வருடத்துக்குரிய தினசரிக் குறிப்பு ,

(b) (i.) ஒவ்வொரு மாதத்திலும் தொடரப்பட்ட வழக்குகளின் தொகை ,

(ii.) ஒவ்வொரு மாதத்திலும் தீர்க்கப்பட்ட வழக்குகளின் தொகை ;

(iii.) ஒவ்வொரு மாத முடிவிலும் விசாரணை முடிவு பெறாது பாக்கியாகவிருக்கும் வழக்குகளின் தொகை ;

என்னும் விவரங்களடங்கிய அந்தக் கால் வருடத்தில் செய்த வேலை விவரத்திரட்டு

38. இப்பிரமாணங்களில்—

"கோடு" என்பது சட்டத்தின்படி நிறுவப்பட்ட அல்லது நிறுவியதாக கருதப்படும் கிராமாந்தரக் கோடு என்ப் பொருள்படும் ;

"டிஸ்திறிக் நீதவான்" என்பது மேலதிக டிஸ்திறிக் நீதவானையும் உள்ளடக்கும் ;

"பிசுக்கால்" என்பது பிசுக்கால் நியமிக்கப்பட்ட மாகாணத்துடப்பட்ட பிரதி பிசுக்காலையும் உள்ளடக்கும் ;

"சட்டம்" என்பது 1945 ம் ஆண்டின் 12 ம் இலக்க கிராமாந்தரக் கோட்டுச் சட்டம் என்ப் பொருள்படும் ;

"நீதவான்" என்பது ஒரு கிராமாந்தரக் கோட்டு நீதவான் என்ப் பொருள்படும்.

39. 1927 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 18 ந் திகதியைக்கொண்ட 7,568 ம் இலக்க "கெசெற்" பத்திரிகையில் பிரசுரிக்கப்பெற்ற கிராமக் கோடுகளுக்கும் கிராமச் சங்கங்களுக்குமான கிரிமினல் வழக்குப் பிரமாணங்களும், அவற்றைப் பின்னர் திருத்துவதற்கேற்பட்ட பிரமாணங்களும் இத்தால் அழிக்கப்படுகின்றன.

## 1 ம் அட்டவணை—மாதிரிப்பத்திரங்கள்.

### 1 ம் மாதிரிப்பத்திரம்—எதிரிக்கு விடும் சித்தாசி.

———— லுள்ள கிராமாந்தரக் கோட்டிலே.

———— குடி ———— முறைப்பாட்டுக்காரன்.

———— குடி ———— எதிரி.

இல : ————.

